[illegible]

V 2 No. 43. 31 Oct 1929

X
[illegible]211, N28K[illegible]
N29.2.43.
189078

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஞு அக்டோபர் மீ 31உ [No. 43.

OFFICE OF THE ... 1929 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 841
2. அப்பர். (நாடக வியல்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 843
3. மானத சாத்திரம் (Psychology)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A. B. L. 846
4. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்தந்தாதி) 848
5. நம்மாழ்வார் விபவம்
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 851
6. வில்லிபாரத விளக்கம் (இராசசூயச் சருக்கம்)
T. S. நடராஜபிள்ளை, B. A., B. L. 852
7. கம்பராமாயணம் (உலாவியற் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 854
8. வர்த்தமானம் 859

கலா நிலயம்

கல்சரை அடையும் வகை

II

கடவுளின் திருவுளக் கருத்தே சிறப்புடன், இடமக லிவ் வுலகமெங்கெங்கும் எந்நாளும் நடைபெற வேண்டுமென்ற நோக்கமுடன் நிலைத்திருக்கின்ற கல்சரென்னுமத் திப்பியத் தன்மையை, தத்தம் இயற்கை அம்சங்களை இயற்கைச்சக்திகளால் வளர்த்து எய்துவதல்லால் மாந்தர் தம் மனமொழிமெய்களாற் செயற்பாலன எதுவும் இல்லையெனும் வாய்மைவழி ஒழுகுவோர், தாம் குறிக்கொண்ட முடிவினைப் பெறுதற்கியலும் என்றவோர் உறுதி உடையவராதல்வேண்டுமென்பதை முன்னர் வற்புறுத்தினோம். ஒருபாலிருந்து அடிப்படையாகிய இவ்வுறுதியை விளைவிப்பதும், மறுபாலிருந்து முடிவாகிய கல்சர்நிலை எய்துவிப்பதற்கோர் அருங் கருவியாயமைந்து உதவுவதும், புத்தகங்கள் ஆகலால், கல்சர் அடையும் வகையினை ஆராயுங்கால் புத்தகங்களுக்குத் தலையிடங் கொடுக்கவேண்டியவர்களா யிருக்கின்றோம்.

புத்தகங்களின் வகைகள் எத்தனையோ இருக்கின்றன. ஆயினும் கல்சரின் சார்பாக நாம் கருதநிற்பன, சான்றோர் தம் தெருண்ட உணர்வினால் திரட்டித் தந்துள நூல்களே யாகும். மாண்புடைய மனங்களுடன் நம்மை உறவு செய்விக்கும் அருமையால் பெரிய நூல்களை, மற்றைய புத்தகங்களினின்று பிரித்துணர்த்தும் பொருட்டு, இலக்கியங்களென் றழைப்பர். எம்மொழியிலும் உயரிய இலக்கியங்களும் உள, இழுதைகள் எழுதும் காகிதக் குப்பைகளும் உள. முன்னவை, மேலோர் உறவினால் வரும் நலங்களெல்லாம் எய்துவிக்கப் பின்னதோ சிற்றினச் சேர்க்கையின் இழிவனைத்தும் இழைத்துவைக்கும். நமது தெய்வசிந்தனை தருமசிந்தனை முதலிய அம்சங்கள் உயர்ந்தோங்க வேண்டுமெனின், மனிதருக்கும் மிருகங்களுக்கும் பொதுவாகவுள்ள குணங்கள்சில ஒடுங்கவேண்டுமென்பது இன்றி யமையாதென்பதை மறத்தலாகாது. மெய்வரு போகமென்னும் படுகுழியில் விழுந்தழிந்து போகின்ற ஆன்மாக்கள் ஒன்றல பல. செல்வமுடைய வகுப்பினருள் எத்தனை ஆன்மவாழ்க்கை சிற்றின்பப் பெருக்கிலே முழுகித் தொலைகின்ற தென்பதை நினைக்கவல்லோர் நெஞ்சங் கலங்கும். ஐம்புல நுகர்ச்சியின்பால் மக்களைக் கூட்டிக்கொடுக்குங் கொடுமையாற் செல்வம் பெரும்பாலும் சபிக்கப்பெற்றதே. நுகரும் வகையற்ற ஏழைகள் முகத்திலும், சிற்றின்பம் வேண்டுமே தமக்கென்று அவாவிக்கிடக்கும் அவலச் செய்தியைக் காணலாம். சிற்றின்பம் என்ற சொல்லால் வேசியும் மதுவும் வேண்டி யுழல்வதையே குறிக்கின்றோம் என்று எண்ணவேண்டா. உணவென்றும் உடையென்றும் உறையும்வீடென்றும், ஊரும் வாகனமென்றும், ஏவலுக்கு ஆளென்றும், உத்தியோகப் பெருமைஎன்றும், இருப்பவர் இறுமாப்பதும், இல்லாதார் ஏங்குவதும், சிற்றின்பமெனும் இனத்தைச் சேர்ந்தவைகளே. இதனால், உணவு உடை உறையுள் ஊர்தி முதலியவைகள் யாவும் சிற்றின்பமே என்றும், அவை யனைத்தையும் விலக்கிவிடல் வேண்டுமென்றும் வாதிப்பதன்று எம் கருத்து. மிதமின்றி இன்னவைகளில் கவனத்தைச் செலுத்துவது சிற்றின்பபோகமென்ற வசைக்கு இலக்காவது ஒருபுறமிருக்க,

18907
KL
10)2Y, N28 KW
N29.2-43

அவைகளைப் பெற்றிருக்கு மளவிலேயே இன்பம் உளதென் றெண்ணி விவகரிப்பதும் சிற்றின்பவாழ்க்கையே யென்று இங்குச் செப்பலுறுகின்றோம். உணவாதிய பொருள்களைத் தேடுவதும், அவ்வாறு தேடிய பொருளையோ அல்லது பிறர் தேடிவைத்த பொருளையோ, நுகர்வதும் ஆகி, உண்டுடுத்துப் பின் மறுவேளைச் சோற்றிற்குக் காத்திருப்பதல்லால் வேறு நோக்கம் இன்மையி னிப் புன்மை வாழ்க்கைதான் பெரிதும் பழிப்பிற் கிடமாயிருக்கின்றது. பரத்தையர்பால் புக்குழலும் காமுகனும், மதுவருந்தித் தள்ளாடும் மதியிலியும், பழக்கத்தின் கொடுமையால் இப்புல்லொழுக்கம் பூண்டாரேனும், தம்செய்கை தகாதென நன்கு தெரிந்தவர். இடையிடையே தம் நெஞ்சும் தமரும் இடித்துரைக்க நைந்து வருந்துவார். நாணமும் அவர்களை நலியும். ஆதலின், இத்தகையவர்கள் நூற்றில் ஒருவரேனும் ஒருகால் அப்பாழும் பழக்கத்தினின்று உய்ந்து கரையேறினு மேறலாம். மற்று, உலக இயலில் ஒரு குற்றமுமற்றதென்று கருதப்படுகின்ற இச்செல்வநுகர்ச்சி வாழ்க்கையைக்கடந்து உண்மையையுணர்ந் துயர்தலென்பது அரிதினுமரிது. 'ஊசியின் காதில் ஒட்டை நுழைவதனி னரிது செல்வவான் பரலோகஞ்சேர்வது' என்று கூறிய கிறிஸ்தவவேதத்தின் உட்கருத்து இதுவேயாகும். வழிதவறிச் செல்கின்றோரென்பது தெரிந்தவர் திரும்புவார்; நேர்வழி இதுவே யென்று நடப்பவர் திரும்பவேண்டும் என்று நினைப்பதெங்ஙனம்.

மன்பதைத்தொகுதி இக்காலம் இன்னதோர் நிலையிலிருக்கின்றது. செல்வத்தால் வரும் புலனுகர்ச்சி பெற்றிருப்பார் பற்பலர் அதனிலேயே ஆழ்ந்து கிடக்கின்றனர். ஒருசிலர், ஏழையர்பால் இரக்கங்கொண்டு ஒவ்வோரளவு அந்நுகர்ச்சி அவர்களும் அடைவதற்கு அரசியல் தனுதாய முதலிய முறைகளின் மூலமாய் முயலலாகின்றனர். இன்னணம் அடையவும் அடைவிப்பதற்கும் அவாவுகின்ற இதனைச் 'சுகம்' என்ற சொல்லால் உலகம்குறிக்கும். ஆனால், ஆங்கிலப்புலவர் கார்லைல் என்பவரைப்போல், ''மைந்த, சுகமோ, நீ! சுகமாய் நீ இருந்தாலென்ன! இல்லாமற் போனாலென்ன! அதனால் யாருக்கு என்ன! உண்டபின் நீ யாது செய்ய நினைத்துளாய்? நீ நடத்திவைக்க நினைத்திருக்கும் எக்கருமத்திற்கு, உணவு உடை முதலியன இல்லாமை இடையூறாயிருக்கின்றது, இயம்புவாய்'' என்று எதிர்வரு மெவரையும் கேட்பார் நம்மிடை இலர். இடைவிடாது உறவுற ஒருவரைக் கேட்கும் இக்கேள்வியானது அவரைக் கல்சரின்பால் செலுத்துவதற்குப் பெரிதும் சாதனமாயிருக்கும். இக்கேள்வி இடைஇடைத் தோன்றித் தகைவதில்லை யாதலால், ஜனங்களில் செல்வமுடையவர்களும் அதனைத்தேடுவோருமாகிய இருதிறத்தோறும் ஆடுபோனவழி ஆடாகக் கடவநாள் கழித்தகல்கின்றனர். நிலைத்தலின்றித் தானே சென்றுவிடும் என்ற பொருளினால் மாத்திரமன்றி, ''இதுகாறும் சென்றவழியே நாமும் செல்வோம், செல்வோம்'' என்று யாவரையும் எண்ணும்படி செய்வதாலும் ஐசுவரியத்திற்குச் ''செல்வம்'' என்றபேர் தக்கதாயது.

உணவனைய இன்றியமையாப் பொருள்கள் இன்மையே வறுமை என்ற பான்மைபோக்கி, இவையிருந்தும் அதனினும் உயர்ந்த வேறோர் நோக்கம் வாழ்க்கைக்கு இல்லாத நிலையே வறுமையாகும் என்றுணர்கின்ற உணர்வுதான் கல்சரின் கோட்டையும்கோயிலுமாகும். முன்னிங்குரைத்த அக்கேள்வியால்தூண்டப்பெறுவது இந்நோக்கம். மெய்யறிவுடையோர் நாவிலன்றி இக்கேள்வி எழுந்திடாது. இத்தகையவர் அத்திப்பூப்பூத்தால்போல் ஒருவரிருவர் நம்மிடையே நடமாடுகின்றனரோ, யாதோ, அறியோம். மெய்யறிவுதான் ஒருசிறி திருப்பினும் சொல்வன்மை இன்மையால் அவர் கேள்வியும் உரையும் பொய்போலும் முடிகின்றன. எனின், மெய்யறிவோடு நாவன்மையும் உடைய மேன்மையோர்தாமே நம்மைக் கல்சரின்பால் உய்த்து உய்த்து உய்விக்கவல்லவர். இவர், ''ஐய பின் என்செய நினைத்தனை'' என வினவுவதுமன்றி, ''இது செயல் அன்றோ முறை'' என விளம்புவது மாகின்றார்.

இவ்விதம், உண்டுடுத்துக்கண்டுகளித்து—இடையிடையே, வெஃகி வெகுண்டு புறங்கூறி அழுக்கறுத்து, மிகுதியில்தெவுட்டி வறுமையில்வருந்தி — காலம்போக்கும் வாழ்க்கையினின்று விலகிவரும் நோக்கமுடைய வித்தகர்தம் உறவு கிடைக்குமிட மெங்கேயென்று நாம் தேடியலையாமல், அம்மேலோர் தம் இயற்கை வண்மையால் தாமே நம்மைத் தேடிவருகின்றாரென்றால், சிற்றினத்தால் தூர்ந்த நம் மனைவாயிலில் வழிவிலக்கி அழைக்கவேண்டாவோ. நாவலர் நவின்றுள நல்லநூல்களே இவை. கண்ணபிரான் ஒருவரேயாயினும் கோவியர் இல்லந்தோறும் ஒரே காலத்தில் கலந்திருந்ததேபோல், கம்பரும் ஷேக்ஸ்பியரும், காளிதாஸரும், காலம் இடம் என்ற இடையூறுகளின்றித் தம்மை அழைப்பவர் எவ்வெவரிடத்தும் விருந்தென வந்து தங்கக் காத்திருக்கின்றனர். விருந்தென வருகின்றாராயினும் இன்சுவை உணவுகளும் அவர்களே கொண்டுவருவதால், விருந்தளிப்பவரும்தாமே ஆகின்றனர். மற்றை விருந்தினரைப்போல் நோக்கக் குழையார்; நாம் முகங்கொடாதிருப்பினும் செவ்விநோக்கிக் காத்திருப்பார்.

சிறந்த இலக்கியங்கள்மூலமாக மேலோர், நம்முடன் உரையாடித் தங்கள் அரும்பெரும் கருத்துக்களைக் கையுறையாகக்கொடுத்து நமது ஆன்மாவினுள் தங்கள் அன்பினைப்பொழிந்து கலக்கின்றனர். இத்தகையதோர் ஆன்மக்களவியல் நடப்பதால் இச்செய்தியை அகப்பொருள் என்னல் வேண்டும். இலக்கியங்கள் இருக்குமாறு அருள்புரிந்த கடவுளிற்குக் கைம்மாறு முண்டோ. மனிதருக்குள் 'சமத்துவம்' ஏற்படவேண்டுமென்று இந்நாள் பலபடி முயல்வாரெல்லாம், இலக்கியங்கள் இவ்வகையில் எத்துணை உதவி புரியவல்லனவென்பது அறிவாராயின் வேறோர் கருவியும் முறையுங் கையாளக் கருதமாட்டார். நாம் எவ்வளவு ஏழையா யிருந்தாலென்ன; நம் தாழ்குடிலுள் நமது ஊர்ச் செல்வவந்தர் வருதற்கு இசையாது கழிந்தாலென்ன! தெய்வப்புலமையோர், மெய்யறிவித்தகர், செந்நாக் கவிஞர், எளிவந்து நம் நனைசுவர்க் கூரையிற் றங்கும்பாக்கியம் செய்திருப்போமாயின் ஏழேழ் பிறவிக்கும் அப்பெருமை ஒன்றுமே பற்றாதோ! வள்ளுவர் வந்து தன் முப்பால் பொழிதர வாழ்வாரே. கம்பர், வேண்டினர் வேண்டுவன வளிக்கும் தம் கற்பகத்தருவினைக் கொணர்ந்து மனைதோறும் நட்டு வளர்த்து அதன் நிழலில் நம்மை வீற்றிருக்க வைப்பார். அரங்கும் பாத்திரங்களுங்கொணர்ந்து முன்றில்தோறும் தன் நாடகங்களை நடித்துக்காட்டுவார்போல் நம்மையே நாம் நன்கு நோக்கிக்கொள்ளுமாறு ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வோர் விஞ்சைக்கண்ணாடி கொடுத்திடுவார், ஷேக்ஸ்பியர். இன்னும் இவ்வாறு நாம் இருக்குமிடந்தேடி நமது உறுதிக்கே இயன்ற மதிப்பரிய மேன்மையை நமக்கு இணையாயிருந்து நல்கித் தோழமை பூண்டொழுகுவார் எத்தனையோ பலர் வரவிருக்க, கைப்பொருள் உடைமையேயன்றி வேறொருசிறப்பிலாச் சிலர் நம் புறங்கடை வாராதிருப்பதால் இலாபமேயன்றி இழந்ததோ வொன்றுமில்லை.

அப்பர்

7. அப்பரும் நாடக வியலும்

iv கூத்து நடத்து முறைகளும், அதன் பிரிவுகளும்

825வது பக்கத் தொடர்ச்சி.

கூத்து நடத்துமுறை முற்காலத்தில் இருவகைத்தாம். அவை வேத்தியல் பொதுவியல் என்பன. வேத்தியல் என்பது அரசனுக்கு நடத்திக்காட்டும் கூத்து. பொதுவியல் என்பது, ஏனையோர்க்கு நடத்திக் காட்டுவது. இவற்றுள் பேதம் என்னையோவெனில், பலவுள. ஆடுங்காலம் வேத்தியலில் எற்பாடாகும் (தற்காலத்தில் matinee Performance என்பர்.) பொதுவியற்கூத்து பெரும்பாலும் மாலையும் யாமும் ஆடப்படும். ''சூழ்கழன் மன்னற்குக் காட்டல் வேண்டி,'' மாதவி யாடிய கூத்து வேத்தியலாகும். வேட்டுவவரியும் குன்றக்குரவையும் யாமத்திலும், ஆய்ச்சியர்குரவை வைகலிலும்ஆடியவை சிலப்பதிகாரத்திற் காண்க.

ஆடுங் காலத்தில் மாத்திரமன்று. பாடி யாடும் விஷயங்களிலும், வேத்தியலுக்கும் பொதுவியலுக்கும் பேதம் உள; அவையாவன:—அரசன் சத்துருக்களாற் செய்யப்பட்ட வசையாயுள்ளன வறிந்து அவை தோற்றுதபடி வசையில்லா மொழிகளால் நாடகக்கவிகள் செய்யவேண்டும். அவை தாளவறுதிகள் செவ்வனே விளங்க மயங்காது நிற்றல்வேண்டும். அரசன் முன்னர் எத்தகைய கூத்தும் எத்தகைய பாட்டும் மனம்போனவாறு பாடல் மரபன்று. இதையே இளங்கோவடிகள் மூன்று இடங்களில் வற்புறுத்திக் காட்டுகின்றனர்.

'' வேத்தியல் பொதுவிய லெனவிரு திறத்து
மாத்திரை யறிந்து மயங்கா மரபி
னாடலும் '' என்று ஊர்காண் கதையிலும்,
'' வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தி
னாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்து'' என்று
அரங்கேற்று காதையிலும் வருவன காண்க.

பொதுவியலில் ஆடுவது பொதுசனங்களுக்கு ஏற்றவாறு ஆடுவதாம். வேந்தனுக் காடுவது சாந்திக்கூத்தாயும், பொதுசனங்களுக் காடுவது விநோதக்கூத்தாயும் பெரும்பாலும் காணப்படும்.

வேந்தனுக்காடும் கூத்தர் மிகவும் சிறந்த கவிகள், முத்தமிழிலும் வல்லவர். மாதவியுடன் வந்தவர்கள் சிறப்பை அரங்கேற்றுகாதையிற் காண்க. சோழநாட்டில் மாத்திரமன்று. முத்தமிழ்வகையும் காட்டி ஆடும் நாடகக்கணிகையர்க்குத் தலைவரிசை ஆயிரத்தெண் கழஞ்சு பொன்பெறுதல் நூல்வழக்காம்.

'' நால்வேறு வகையி னயத்தகு மரபி
னெட்டுக் கடைநிறுத்த வாயிரத் தெண்கழஞ்சு
முட்டா வைகன் முறைமையின் வழா அத்
தாக்கணங் கனையார்'' என்பது காண்க.

இப்பெரிய பரிசு பெறுவதற்கு ஏற்றவாறு ஆடுவதற்கும், பொதுசனங்கள் இஷ்டப்பட்டு ஏதாகிலும் கொடுப்பதற்கும் ஆட்டபேதம் நேரவேண்டு மன்றோ?

வேந்தன்முன்ன ராடும்போது பெரும்பாலும் காமமேற்றும் அழகிய மங்கையர்கள் தலைக்கோலரிவையாய் அமைவதுடன், தலைப்பாட்டு வாரப்பாட்டு இடைப்பாட்டு முதலியவற்றிற்கு மமைவர். அடியார்க்குநல்லார், '' காவல் வேந்தன் இலைப்பூங் கோதை யியல்பினின் வழாமை '' என்பதின் விருத்தியுரையாய், ''நாடகமகள் அரங்கேறக்கண்ட அரசன் அவள்மேற் காமக்குறிப் புடையனுதை வியல்பு'' என்றும்; ''ஆயிரத்தெண்கழஞ்சு, ஒருமுறையாகப் பெற்றன'' னென்பதற்கு '' ஒருநாளைக்குப் பரிசமாக '' வென்றும்; '' ஆயிரம் பரிசத்துக்கும், எண்கழஞ்சு மெய்ப்போகத்துக்குமாக நிச்சயித்தென்க'' வென்றுங் கூறுவார். ஆதலால் வேந்தன்முன் கூத்தாடும் பாத்திரங்கள் பொதுவியலிற் காணப்படா. கோவலன்முன்னர்ஆடிய மாதவியின் கூத்தில், மாதவி யொருத்தியே பெண்பாலாகும். துணையாய் வந்தோர் பெண்பாலரென அநுமானிக்க விடமில்லை. ஆயினும் வேத்தியலில்

''மலைப்பரும் சிறப்பிற் றலைக்கோ லரிவையும்
வாரம் பாடும் தோரிய மடந்தையும்
தலைப்பாட்டுக் கூத்தியு மிடைப்பாட்டுக் கூத்தியும்,''

முக்கியமாக வேந்தன் கட்புலனுக்கு இன்பம் விளைவிப்பார்.

தலைப்பாட்டுக் கூத்தியாவது உகம் பாடுபவள். இடைப்பாட்டு கூத்தி ஒளகம் பாடுபவள். இவர் கூட்டக் கூத்தியர். சிவபெருமானை வேந்தனுகக் கொண்டு வேத்தியல்வகையில் ஆடும் ஞானநாடகத்தில் தலைப்பாட்டுக் கூத்தி பாடுவதுபோலும், அப்பர் சில பதிகங்கள் தலைவியின் காமக்குறிப்புணர்த்தியதுபோலும், முமூட்சு நிலைபைச் சிற்றின்ப வுடையில் காட்டியிருக்கின்றனர். அப்பதிகங்களில் இந்நாடக நிலை நன்கு விளங்குவது, திருக்கழிப்பாலை—பண்—காந்தாரமென்னும் திருப்பதிகமாகும். அப்பதிகமும் அதன் வேத்தியல் இலக்கணமும் காண்போம் :—

திருக்கழிப்பாலை-பண்-காந்தாரம்

வனபவள வாய்திறந்து ''வானவர்க்கும்
தானவனே'' யென்கின் றாளாற்
''சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்ற'' னென்கின் றாளால்
''அனபவள மேகலையோ டப்பாலைக்
கப்பாலா'' னென்கின் றாளாற்
கனபவளஞ் சிந்துங்க ழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (1)

''வண்டுலவு கொன்றை வளர்புன்
சடையானே!'' யென்கின் றாளால்
''விண்டலர்ந்து நாறுவதோர் வெள்ளெருக்க
நாண்மலருண்'' டென்கின் றாளால்
''உண்டயலே தோன்றுவதோ ருத்தரியப்
பட்டுடைய'' னென்கின் றாளால்
கண்டயலே தோன்றுங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (2)

''பிறந்திளைய திங்களெம் பெம்மான்
முடிமேல'' தென்கின் றாளால்
''நிறங்கிளருங் குங்குமத்தின் மேனி
யவன்நிறமே!'' யென்கின் றாளால்

மறங்கிளர்வேற் கண்ணுள் "மணிசேர்
மிடற்றவனே!" யென்கின் ருளாற்
கறங்கோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ!

"இரும்பார்ந்த சூலத்த னேந்தியோர்
வெண்மழுவ" னென்கின் ருளாற்
"சுரும்பார் மலர்க்கொன்றைச் சுண்ணவெண்
ணீற்றவனே!" யென்கின் ருளாற்
"பெரும்பால னாகியோர் பிஞ்ஞக
வேடத்த" னென்கின் ருளாற்
கரும்பானல் பூக்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (4)

"பழியிலான் புகழுடையன் பானீற்ற
னேற்ற" னென்கின் ருளால்
"விழியுலாம் பெருந்தடங்கண் ணிரண்டல்ல
மூன்றுளவே!" யென்கின் ருளாற்
"சுழியுலாம் வருகங்கை தோய்ந்த
சடையவனே!" யென்கின் ருளாற்
கழியுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (5)

"பண்ணார்ந்த வீணை பயின்ற
விரலவனே!" யென்கின் ருளால்
"எண்ணார் புரமெரித்த வெந்தை
பருமானே!" யென்கின் ருளாற்
"பண்ணார் முழவதிரப் பாடலோ
டாடலனே!" யென்கின் ருளாற்
கண்ணார் பூஞ்சோலைக் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (6)

"முதிருஞ் சடைமுடிமேன் மூழ்கு
மிந்நாக" மென்கின் ருளால்
"அதுகண் டதனருகே தோன்று
மிளமதிய" மென்கின் ருளாற்
"சதுர்வெண் பளிக்குங் குழைகாதின்
மின்னிடுமே" யென்கின் ருளாற்
கதிர்முத்தஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (7)

"ஓரோத மோதி யுலகம்
பலிதிரிவா" னென்கின் ருளால்
"நீரோத மேற நிமிர்புன்
சடையானே!" யென்கின் ருளாற்
"பாரோத மேனிப் பவள
மவனிறமே" யென்கின் ருளாற்
காரோத மல்குங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (8)

"வானுலாந் திங்கள் வளர்புன்
சடையானே" யென்கின் ருளா
"லூனுலாம் வெண்டலைகொண் டூரூர்
பலிதிரிவா" னென்கின் ருளாற்
"றேனுலாங் கோதை திளைக்குந்
திருமார்ப" னென்கின் ருளாற்
கானுலாஞ் சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (9)

"அடர்ப்பரிய விராவணனை யருவரைக்கீ
ழடர்த்தவனே" யென்கின் ருளாற்
"சுடர்ப்பெரிய திருமேனிச் சுண்ணவெண்
ணீற்றவனே" யென்கின் ருளால்
"மடற்பெரிய வாலின்கீ ழறநால்வர்க்
கன்றுரைத்தா" னென்கின் ருளாற்
கடற்கருவி சூழ்ந்த கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ! (10)

இத் திருப்பதிகம் வேத்தியலை வெளியிடப் பல சொற்றொடர்கள்பெற்று விளங்காநிற்கும். "வானவர்க்கும் தானவன்" "திண்டோளன்," "இரும்பார்ந்த சூலத்தன்", "வெண்மழுவன்," "பழியிலான்," "புகழுடையான்" "எண்ணார் புரமெரித்த வெந்தை" முதலியன காண்க.

இவ்வாறு தலைப்பாட்டுக்கூத்தி பாடியபின்னர், நாடகத்தின் முதன்மையவளான தலைக்கோலரிவை முறைப்படி * அரங்கிற் புகுந்து வேந்தனை நோக்கிப் பாடுவாள். அத்தகைய பாடல் † உருவகமே திருவீழிமிழலைத் திருக்குறுந்தொகையிற் காணலாம்:—

என்பொ னேயிமை யோர்தொழு பைங்கழல்
நன்பொ னேநலந் தீங்கறி வொன்றிலேன்
செம்பொ னேதிரு வீழி மிழலையுள்
அன்ப னேயடி யேனைக் குறிக்கொளே. (1)

கண்ணி னாற்களிக் கூரக்கை யாற்றொழு
தெண்ணு மாறறி யாதிளைப் பேன்றனை
விண்ணு ளார்தொழு வீழிமி ழலையு
ளண்ண லேயடி யேனைக் குறிக்கொளே. (2)

ஞாலமே! விசும்பே நலந் தீமையே
காலமே! கருத்தே! கருத்தாற் றொழுஞ்
சீலமே! திரு வீழிமி ழலையுட்
கோல மேயடி யேனைக் குறிக்கொளே. (3)

முத்த னேமுதல் வாமுகி ழும்முளை
யொத்த னேயொரு வாவுரு வாகிய
சித்த னேதிரு வீழி மிழலையு
ளத்த னேயடி யேனைக் குறிக்கோளே. (4)

கருவ னேகரு வாய்த்தெளி வார்க்கெலா
மொருவ னேயுயிர்ப் பாயுணர் வாய்நின்ற
திருவ னேதிரு வீழி மிழலையுட்
குருவ னேயடி யேனைக் குறிக்கொளே. (5)

* பிணியுங் கோளு நீக்கிய நளா
லணியுங் கவினு மாசற வியற்றித்
தீதுதீர் மரபிற் றீர்த்த நீரான்
மாசறு தீர மண்ணுநீ ராட்டித்
தொடலையு மாலையும் படலையுஞ் சூட்டிப்
பிண்ட முண்ணும் பெருங்களிற்றுத் தடக்கையிசைக்
கொண்டு சென்றுநீஇக் கொடியெடுத் தார்த்து
முரசு முருடு முன்முன் முழங்க
வரசு முதலான வைம்பெருங் குழுவுந்
தேர்வலஞ் செய்து கவிகை கொடுப்ப
வூர்வலஞ் செய்து புகுந்த பின்னறத்
தலைக்கோல் கோடல் தக்க தென்ப"

செயிற்றியனார்.

† இதையே மற்றொரு பதிகத்திலும் இளங்கோவடிகள் கூறியவாறு "அந்தரக் கொட்டுட னடங்கிய பின்னர், மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப் பாற்பட நின்றபாலைப் பண்மே லானுங்கி னுாீஇய நன்கன மறிந்து மூன்றளந் தொன்று கொட்டி" என்று விளக்கினர். அப்பரும்:—

பாலை யாழொடு செவ்வழி பண்கொள
மாலை வானவர் வந்துவ ழிபடு
மாலை யாரழ லந்தண ராகுதி
வேலை யார்தொழு வீழிமி ழலையே"

திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை 12.

காத்த னேபொழி லேழையுங் காதலா
லாத்த னேஅம ரர்க்கயன் றன்றலை
சேர்த்த னேதிரு வீழி மிழலையுட்
கூத்த னேயடி யேனைக் குறிக்கொளே. (6)

நீதி வானவர் நித்தல் நியமஞ்செய்
தோதி வானவ ரும்முணா ராததோர்
வேதி யாவிகிர் தாதிரு வீழியு
ளாதி யேயடி யேனைக் குறிக்கொளே. (7)

பழகி நின்னடி சூடிய பாலனைக்
கழகின் மேல்வைத்த காலனைச் சாடிய
வழக னேயணி வீழி மிழலையுட்
குழக னேயடி யேனைக் குறிக்கொளே. (8)

அண்ட வானவர் கூடிக் கடைந்தநஞ்
சுண்ட வானவ னேயுணர் வொன்றிலேன்
விண்ட வான்பொழில் வீழி மிழலையுட்
கொண்ட னேயடி யேனைக் குறிக்கொளே. (9)

ஒருத்த னேங்கலைத் தாங்கலுற் றானுரம்
வருத்தி னாய்வஞ்ச னேன்மன மன்னிய
திருத்த னேதிரு வீழி மிழலையு
ளருத்த னேயடி யேனைக் குறிக்கொளே. (10)

எனக் காவல்வேந்தனைத் தலைக்கோலரிவை பாடுவது சாதாரணமன்று. ஏனெனின், வாரம்பாடும் தோரிய மடந்தையர்கூட்டக்கூத்தியரு ளிருந்து தலைக்கோலரிவைக்கு உதவிபுரிவதால், இவள் பெரும்பாலும் விஷயம் அவிநயம் முறையால் * (Dumb Show) ஆடிக் காட்டுவாள். அவிநயம் இருபத்திநான்கு வகைத்து. அவற்றின் வரலாறும், இலக்கணங்களும் அரங்கேற்றுகாதையின் அடியார்க்குநல்லா ருரையிற் காண்க. †

தற்காலத்தில் நாடகஅரங்கில் பாடும் சங்கீதப் பொழுதுபோக்குக்கும் நாடகக்கதைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. முற்காலத் தமிழ் நாடகத்திலோ, பதினோராடலும், பாட்டுங் கொட்டும், விதிமாண் கொள்கையின் விளங்க, ஆடலும் பாடலும் பாணியும் தூக்கும் கூடும், ஆடுங்காலத்தில் ஒற்றைக்கையால் ஆடவேண்டியவற்றை ஒற்றைக் கையாலும், இரட்டைக்கையா லாடவேண்டிய அஞ்சலி முதலியவற்றை இரட்டைக்கையாலும் ஆடவேண்டுமென்றி மனம்போனவாறு ஆடலாகாது. இவற்றுள் இணையா வினைக்கை யாகிய ஒற்றைக்கை முப்பத்திமூன்று வகைத்தென்றும், பிணையலென்னும் இணைக்கை அல்லதுஇரட்டைக்கை பதினைந்துவகைத்தென்றும்அடியார்க்குநல்லார் வகுத்துக் காட்டுகின்றனர் $. அவற்றுள் ஒற்றைக்கையாகப் பிண்டி :—

"இணையா வினைக்கை யியம்புங் காலை
யணைவுறு பதாகை திரிப தாகையே
கத்திரிகை தூப மராள மிளம்பிறை
சுகதுண் டம்மே முட்டி கடகஞ்
சூசி பதும கோசிகந் துணிந்த
மாசில்காங் கூலம் வழுவறு கபித்தம்
விற்பிடி குடங்கை யலாபத் திரமே
பிரமரந் தன்னொடு தாம்பிர சூடம்
பிசாச முகுளம் பிண்டி தெரிநிலை
பேசிய மெய்ந்நிலை யுன்ன மண்டலஞ்
சதுர மான்றலை சங்கே வண்டே
யதிர்வி லிலதை கபோத மகரமுகம்
வலம்புரி தன்னொடு முப்பத்தி மூன்றென்
றிலங்குமொழிப் புலவ ரிசைத்தன ரென்ப"

பிணையலென்னும் இரட்டைக்கை, (இணைக்கை) வருமாறு:—

எஞ்சுத லில்லா விணைக்கை யியம்பி
லஞ்சலி தன்னொடு புட்பாஞ் சலியே
பதுமாஞ் சலியே கபோதங் கற்கடகம்
நலமாஞ் சுவத்திகங் கடகா வருத்த
நிடதந் தோர முற்சங்க மேம்பட
வுறுபுட் பபுட மகரஞ் சயந்த
மந்தமில் காட்சி யபய வத்த
மெண்ணிய வருத்த மானந் தன்னொடு
பண்ணுங் காலைப் பதினைந் தென்ப.

இவற்றின் தனித்தனி யிலக்கணங்களையும் அவற்றின் சூத்திரங்களையும் அடியார்க்குநல்லார் உரையிற் காண்க. தற்காலத்தில் ஆட்டக்கச்சேரியென்று பொதுமகளிர் ஆடும் பரதநாட்டியத்தில் இக்கலை சிதைந்தும், பண்டைக்காலத்திய பாணியுந் தூக்கும் பிணையலும் பிண்டியும் நாட்டியத்தில் அவிநய முறையிற் காட்டுழி காணலாகும். சிவபெருமான் நடனத்திலும் பூதகணங்கள் பாணிசெய்வதைத் தேவாரத்தில் ஆங்காங்கு அப்பர் காட்டுகின்றார்.

ஒருடம் பிருவராகி யொளிநிலா வெறிக்குஞ்சென்னிப்
பாரிடம் பாணிசெய்யப் பயின்றவெம் பரமமூர்த்தி
காரிடம் தில்லை தன்னுட் கருதுசிற் றம்ப லத்தே
பேரிடம் பெருக நின்று பிறங்கெரி யாடு மாறே!

கோயிற் றிருநேரிசை 6.

[பாணி யென்பது தாளங்கள்; அதன் சூத்திரம்:—
"தொட்டு மசையுந் தூக்கு மளவு
மொட்டப் புணர்ப்பது பாணி யாகும்"
தொட்டு, அரை மாத்திரை; அசை, ஒரு மாத்திரை; தூக்கு, இரண்டுமாத்திரை; அளவு, மூன்று மாத்திரை;]

இவ்வாறு ஆடும் நடம் வேத்தியலில் அளவற்ற பயனைக் கருதியே நிகழ்த்தப்படுமென்பதற்கு அத்தாட்சிபோல் அப்பரும்,

நீடுயர் மண்ணும் விண்ணு நெடுவேலை குன்றோ
டுலகேழு மெங்கு நலியச்
சூடிய கையராகி யிமையோர் கணங்கள்
துதியோதி நின்று தொழலு
மோடிய தாருகன்ற னுடலம் பிளந்து
மொழியாத கோப மொழிய
ஆடிய மாநடத்தே மனலாடி பாத
மவையா நமக்கோர் சரணே" என்றார்.

தசபுராணம்-பண்-பழம்பஞ்சுரம் 4

* பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூ னன்கு கடைப்பிடித்துக்
காட்டினள். ஆதலால்........................
.........................ஆயிரத் தெண்கழஞ்
சொருமுறை யாகப் பெற்றன ளதுவே
நூறுபத் தடுக்கி யெட்டுக் கடைநிறுத்த
வீறுயர் பசும்பொன் பெறுவதிம் மாலை
மாலை வாங்குனர் சாலுநங் கொடிக்கென
மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து
நகர்வனர் போல்வதோர் பான்மையி னிறுத்த"...
[சிலப்பதிகாரம்—அரங்கேற்று காதை-157—169]

† பக்கம் 85—87 சுவாமிநாதய்யர் பதிப்பு 1927ஆ.
$ பக்கம் 92—97 ஷை

MADRAS

மானத சாத்திரம்

PSYCHOLOGY

[836வது பக்கத் தொடர்ச்சி]

உலகியலை ஆராய்வாருக்குக் காட்சியே தலைசிறந்த அளவையாகின்றது. எனினும் குறியாராய்ச்சி (அநுமானம், Inference) முதலியன வாராமல் இல்லை. அவையனைத்தும் காட்சியென்ற அடிப்படையின்மேல் கட்டப்பட்டவையே யாம். உண்மையறி நூலைப்போலக் காற்றிற் பறக்காது இயற்கைநூல் மண்ணிலேயே நடக்கின்றது. ஆனால் காணாதவற்றைப்பற்றிக் கணக்காண்பது இங்கும் சிறிதளவு உண்டு. எனினும் அந்தக் கணவின் அளவோ ஒவ்வொரு இயற்கைநூலினும் மாறுபட்டே காணப்படுகின்றது. அந்நூல்கள் அனைத்தும் ஒருபடித்தாக இல்லையன்றோ? உலகியல்துறையில் அங்கங்குக் கிடக்கும் செய்திகளை வகைசெய்து அவற்றில் ஒன்றற்கொன் றுள்ள தொடர்பை யுணர்ந்து, அத்தொடர்பை ஒட்டி அவற்றைத் தொகைசெய்து அவை ஒவ்வொன்றின் வரன்முறையை ஆராய்ந்தறிந்து விளக்கி விரித்துரைத்தலே இயற்கை நூலின் முறையாகும். உலகத்தில் நாம் பழகிவரும் போது அறியாமையால் நமது உள்ளத்தே எழுகின்ற சிலபல கேள்விகளுக்கு விடையளிப்பதே இயற்கை நூல்களின் முடிபாகும். எல்லோருக்கும் ஒப்பமுடிந்த விடைகள் சில கேள்விகளுக்கே அகப்பட்டுள்ளன. சில கேள்விகளுக்கோ அத்தகைய முடிபான விடைகள் நம்மறிவிற் கெட்டவில்லை. தற்போது நாமறிந்துள்ளசெய்திகளுக்குப் பொருத்தமானதொரு கொள்கையே (Hypothesis) விடையாகக் கிடைக்கின்றன. மின்வெளி (Ether) என்பது ஒன்று உண்டா என்ற கேள்விக்கு ஒரு முடிபான விடை கூறமுடியாது; இருக்கலாம் என்றே சொல்ல இடமுண்டு. உண்டு என்று கொண்டால் ஒளியின் இயக்கத்தை எளிதில் அறிய முடிகின்றது. ஆதலின் இதனைத் தற்போதைய கொள்கை (Hypothesis) எனலாம். இந்த அளவிற்கு, இயற்கைநூலினும் கணக்காண இடமுண்டு. சில இடங்களில், இந்தத் தற்போதைய கொள்கைகளையும் கண்டறிய முடியாமல் திகைக்கின்றோம். அந்த இடங்களில் நமது மனத்தே இன்ன கேள்விதான் எழுகின்றது எனத் தெளிவாகக் கூற முடிவதில்லை. அப் பொருளைப்பற்றிய வளவில் நமது அறியாமையை அளந்தறிந்து நமது கேள்வியைத் தெளிவாக அறிவதோடு நின்றுவிடுகின்றோம். நமக்கோ, பல பொருள்களைப் பற்றித் தெளிவான எண்ணம் இருப்பதில்லை. அவ்வெண்ணம் இவ்வாறு தெளிவடையத்தெளிவடையக் கேள்வியும் உருப்பெற்று எழுகின்றது. பொருளை நன்கு அறியாத போது கேள்வியே எழுவதில்லை. எனவே, கேள்வி எழுவதும் நம் அறிவின்பெருக்கத்தின் அறிகுறியாம். சிலஇயற்கைநூல்கள் இவ்வாறு கேள்வியை எழுப்பிப் போகும்வழியை மேடுபள்ளமின்றித் திருத்தித்திருத்தி யமைக்கின்றன. உள்ளத்தியற்கைநூல் கேள்வியை எழுப்பும்நிலையிலும் இருக்கின்றதாதலால் எல்லாக் கேள்விகளுக்கும் முடிந்தமுடிபான விடைகளை இங்கு எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு பல வகையான நிலையில் இருக்கும் இயற்கைநூல்கள் காட்சி என்ற கற்கோட்டையி னுள்ளேதான் ஒளிர்கின்றன.

ஆனால், ஒவ்வொரு பொருளையும் நேரேபோய்க் காண்பதோ இயலாது. அதுபற்றி இயற்கைநூலினர் செயற்கைக்காட்சியைக் கையாள்கின்றனர். சில செடிகொடிகள் மிக்கசூடான நிலத்துத்தான் விளைகின்றன. குளிர்நாட்டில் வாழ்வார் இச்செடிகொடிகளைப்பற்றி ஆராயவேண்டுமானால், திரைகடலோடித் தேடித்தான் யலைய வேண்டும். அக் குளிர்நாட்டினர் அவ்வாறு உழலாது சூட்டறை ஒன்று செயற்கையில் ஏற்படுத்தி அதனில் அச்செடிகொடிகளை நன்கு பயிர்செய்விக்கின்றனர். இச் செய்க்காட்சியால் (Experiment) நம் அறிவு, விரைவில் அகலமாகின்றது. இயற்கைப் பரப்பில் எங்கெங்கோபோ யலையாது நாம் வேண்டியவற்றை வேண்டியவிடத்தே வேண்டியபோது வேண்டிய கட்டுத்திட்டங்களுக்கு இடையே காணுதல் கூடும். இயற்கையில் கட்டுத்திட்டங்கள் ஏற்படுத்திக் காண இயலாது. கட்டுத்திட்டங்களிலேயே பலவகையான செய்க்காட்சிகளைச் செய்துகொண்டு இயற்கையின் உண்மையியல்பை எளிதில் அறியலாம். பிறர் செய்யும் செய்க்காட்சியை நாமும் செய்துகொண்டு அவர் கண்ட முடிபின் உண்மையை அறியலாம். செய்க்காட்சியில் பல கருவிகளும் உபயோகப்படுகின்றன. இயற்கைநூல் கொள்கைகள் காற்றில் பறவாது அளந்தறியத் தக்கனவாக இருக்கின்றன. எண்ணியும் நிறுத்தும், அளந்தும், முகந்தும் காணும் அளவைகளையும் இயற்கைநூ லறிஞர் பயன்படுத்திக்கொள்கின்றனர். ஊசிமுனையால் புறங்கையில் குத்திக்கொண்டு போவோமானால் சிற்சில இடத்தே நோயினையும் சிற்சிலஇடத்தே சூட்டையும் உணர்கின்றோம். இவற்றின் பரப்பினை அளந்து காணலாம். சினந்து விழும்போதும் நகைத்து மகிழும்போதும், நமது குருதியோட்டம், உடல் துடிப்பு, முதலியனவற்றைப் பல கருவிகளைக்கொண்டு அளந்து காணுதல்கூடும்.

உள்ளத்தியற்கை நூலினர், பண்டைநாள்தொட்டுக் கையாளு முறையானது அகக்காட்சி(Introspection)என்பதேயாகும். பண்டைநாளில் அஃதொன்றே முறையாய் விளங்கியது. உள்ளத்தின் செயல்கள் தனித்தனியே ஒவ்வொருவருக்கும் உரியதாகலின் பிறரால் அவற்றை எளிதில் அறியஇயலாது. அவ்வவர்களே தமது மனநிலையை வெளியிட்டால்தான் நாம் அறிதல் கூடும். அவ்வாறு எடுத்துரைக்க வேண்டுமானால், அவ்வுள்ளச்செயல் நிகழ்ந்தஉடனேயே, அவர்கள் அவற்றை உண்ணோக்கிக்காணல்வேண்டும். அகக்காட்சியை மற்றைய இயற்கைநூல்களும் பயன்படுத்திக் கொள்கின்றன. மிக ஒளியோடு விளங்கும் ஒரு மின்னொளிவிளக்கை நன்றாக உற்று நோக்கியபின், உடனே இருட்புறத்தே திரும்பினல், அவ்விளக்கின் வடிவம் கண்ணெதிரே தோன்றுகிறது. அந்நிழலை உற்று நோக்குவதால் முன் நன்கு காணப்படாத குறிப்புக்கள் குறித்துவைக்கப்பட் டிருக்கின்றன. ஆனால் சினம் இன்பம் முதலிய சிக்கலான உள்ளநிலையை இவ்வாறு

உற்றுநோக்குவதென்பது அருமையினும் அருமை. வெகுண்டு விழும்போது வெகுளிவரும்வழியை உற்று நோக்கினல் வெகுளி மறைந்தன்றோ ஓடும். வெகுளியடங்கியதும் வெகுளிநிலையை உடனே நினைப்பூட்டி ஆராய்தல் கூடும். உணவை உண்டு உகப்பதைவிட்டு அதனைக்கண்டு களிப்பதற்கு ஈது ஒப்பாகும். எனினும், பழக்க வழக்கத்தால் இப்பயிற்சி பயன்படுகின்றது. பல உள்ளநிலைகளைப்பற்றி வேறு வகையில் அறிய இயலாமையால் இம் முறையையும் நாம் கையாள வேண்டியிருக்கிறது

உள்ளத்தியற்கைநூல் எதைப்பற்றிக் கூறுகின்றதென்பதைக் கணக் கண்டாற்போல ஒவ்வொருவரும் அறிந்துவைத்துள்ளோம். இதனை ஆவிநூல் (Science of Soul) என்று முன்னளில் வழங்கினர். உலகியலில் கண்டறியக்கூடாத ஆவியினைப்பற்றிப் பேசப் புகுந்தால், ஆவியை நம்பாதவர் அனைவரும் இந்நூலினை இகழத்தொடங்குவர். குளிக்கப்போய்ச்சேற்றைப் பூசிக்கொள்ள வேண்டிவரும். நூலினை முற்ற முடிய ஆராய்ந்தபிறகு ஆவியார் உளரோ இலரோ எனச் சுட்டிக்காட்டவும் கூடும். ஆனால் தொடக்கத்திலேயே அதைப்பற்றிப் பேசுதல், திருமணம் ஆவதற்கு முன்னரே செல்வப்பிள்ளையர் எத்துணையர் என்று கேட்பதுபோ லாகும்.

மானதசாத்திரத்தை நனவுநிலை நூல் (Science of Consciousness) என்பர் ஒரு சாரார். உறக்க நிலைக்கு மாறாக விழிப்புநிலையில் நாம் ஏதாய் இருக்கின்றோமோ, அஃதே நனவுநிலையாம். கனவு இல்லாத உறக்கத்தில் புகும்போது நாம் எவ்வகையில் சிறுகச்சிறுகக் குறைவுபடுகின்றோமோ, பின் வெளி ஒலியால் உறக்கத்தினின்று எழுகையில், சிறுகச்சிறுக எந்தஅளவில் மிகுதியாகின்றோமோ, அஃதே நனவாம். கலைவிலாத நிறையுறக்கத்திலும் ஓர் வகையான உணர்ச்சி உளதெனச் சிலர் கூறுவதுஉண்மையானல், அங்கும் நனவுநிலையே காண்கின்றோம் என்னலாம். அறிதுயில்வகை பல(Hypnotism etc). அந்தநிலையை நனவுநிலை என்று சொல்வதற்கில்லை. அன்றியும், நாம் தூங்கும்போது, நம்முடல்மேல் ஈ முதலியன குந்தினல் நனவின்றியே கை கால் அசைத்து அவற்றை ஓட்டுகின்றோம். இவற்றையும் உள்ளத்தியற்கைநூல் ஆராய்கின்றமையால் நனவுநூல் என்று சொல்வதற்கில்லை. நடத்தைநூல் என்பர் மற்றொருசாரார். உள்ளம் என்பதனை அதன் செயல்களாலேயே அறிந்துகொள்கின்றோம். உள்ளத்தினை உடலின் தொழில்களினின்றும் குறித்தறிகின்றோம். சினந்தால் கண் சிவக்கின்றது. எண்ணமிட்டிருந்தால் நரம்புகளின் அசைவு உண்டாகின்றது. நடத்தைநூல் என்பது இவ் வுள்ளத்தியற்கைநூலின் இயல்பினை நன்கு விளக்குகின்றது. ஆனல் ஒரு சாரார் உடலினும் உள்ளம் வேறன்று என்றும், உள்ளத்தின் செயல் அனைத்தும் உடலின் செயலே என்றும், நாக்கில் எச்சில் ஊறுவதுபோல மூளையில் அறிவு ஊறுகின்றது என்றும், கூறத்தொடங்கி உள்ளநூல் என்பது நடத்தைநூலே எனப் புணர்ந்துரைக்க வருகின்றனர். ஆதலின் அவ்வாறு புணர்ந்துரைத்தால் அவர்கள் கொள்கையை ஒப்புக்கொண்டவ ராவோம்.

மற்றொருசாரார், இந்நூல் உள்ளத்தைப் பற்றியதென்பர். உள்ளம் என்று ஏதோ ஒரு பொருள் தனியே உருவும் வடிவமுமாகப்புகுந்து மறைந்துகிடக்கின்றது என்ற கொள்கையையும் தொடக்கத்திலேயே நாம் பேசுதலாகாது. பெயர்ச்சொல் ஒன்று இருக்குமானல், அதனல் குறிக்கப்படுவது ஒரு வடிவப்பொருள் என்ற முடிவிற்கு வந்துவிடுகிறோம். உள்ளமானது உள்ளச்செயலையே குறிக்கின்றதென்பதையும், அச்செயல்கள் ஒவ்வொருவர்க்கும் தனித்தனி உரியன என்பதையும் மறவாதிருந்தால் உள்ளத்தைப் பற்றியநூல் எனக் கூறுவதால் கேடு ஒன்றும் இல்லை. நினைத்தல், சினத்தல் முயலுதல் எண்ணமிடல் அறிதல் முதலியவை உள்ளத்தின் செயல்கள் என அறிந்துள்ளோம். உள்ளத்தியற்கைநூல் முழுதினையும் அறிந்தபிறகு அந்நூலின் இயல்பினை நன்கு விளக்கிக் காட்டுதல்கூடும்.

உலகத்துள்ள பொருள்கள் எல்லாவற்றையும் உள்ளத்தியற்கை நூல் ஆராய்கின்றது. பொருள்களைப் பொருள்கள் என்றஅளவில் மற்றைய நூல்கள் ஆராய்கின்றன. அது புறநிலை ஆராய்ச்சி. உள்ளத்தியற்கைநூலோ, அவை மனதால் அறியப்படுகின்ற தொடர்பினையே ஆராய்கின்றது. இஃது அகநிலை ஆராய்ச்சி யாகும்.

உள்ளத்தியற்கைநூலானது, ஒப்புமுறை (Comparative method) வளர்ச்சிமுறை (Genetic method) நோய் முறை (Pathalogical method) என்ற பலவகையாக ஆராய்கின்றது. மக்களின் செயல்களோடு விலங்குகளின் செயல்களையும் குழவிகளின் செயல்களையும் ஒப்புநோக்கி ஆராய்வதால் பல உண்மைகள் புலனுகின்றன. மக்களிலும் பல இனத்தாரின் செயல்களை ஒப்புநோக்குவதும் பெரும்பயன் தருகின்றது. ஈதே ஒப்பு முறையாம். அறிவானது குழவிநிலையில் எங்ஙனம் விளங்குகின்றது. மக்களது முன்னேற்ற ஏணியின் கீழ்ப்படியில் உள்ள காட்டுமிருண்டுகளிடம் எங்ஙனம் காணப்படுகின்றது, நாளாக நாளாக எவ்வாறுவளர்கின்றது, என்றெல்லாம் ஆராய்வது வளர்ச்சி முறையாகும். வளர்ந்துமுற்றிச் சிக்கலாவதற்குமுன்னர் மூளையிலேயே உள்ளத்தின் செயல்களைத் தெளிவாகக் கண்டறியலாம். இவ்வகையாராய்ச்சியால் உள்ளநிலையின் அடிப்படையான பொருளின் இயல்பினை அறிவது எளிதாகின்றது. இன்றியமையாத இயல்பானது முதுமையிற்போல இளமையிலும் காணப்படுமன்றே. முதுமையில் பல சிக்கல்களுக்கிடையில் இவ்வின்றியமையா இயல்பினை அறிவது அருமை. இளமையில் அச்சிக்கல் இல்லாமையால் அறிவது மிக எளிது. இனி, நோய்முறையாவது நோயுற்றோரது மனநிலையை ஆராய்வதாகும். அவர்களது மனத்தோடு பொதுமக்களின் மனதை வைத்து ஆராயும்போது அறிவின் பொதுநிலை நன்கு புலனுகின்றது.

நோய்வாய்ப் பட்டாரது உடல் நலிவதோடு உள்ளமும் நலிகின்றது. உள்ளத்திற்கும் உடலிற்கும் ஒரு தொடர்புண்டு. உள்ளத்தின் செயலினைத்தான் நாம் அறிகின்றோம். உள்ளத்தின் செயலோ உடலின் செயலாக முடிகின்றது. உடலைவிட்டு உள்ளத்தைத் தனிப்பொருளாக அறிய இயலாது. மேல் நோக்காகப் பார்க்குமிடத்து உள்ளத்தின் இயக்கமனைத்தும் நரம்பின் இயக்கமாகவே தோன்றுகின்றது. ஆகவே நரம்பினமைப்பையும் உடலமைப்பினையும் சிறிதளவு நாம் அறியவேண்டி நிற்கின்றோம். அவ்வாறாயின் உடல் நூலுக்கும் உள்ளத்தியற்கைநூலுக்கும் என்ன வேற்றுமை? உடல் நூலானது ஒவ்வொரு உடலியக்கத்தினையும் ஒவ்வொரு உறுப்பின் செயலாகக் கருதி ஆராய்கின்றது. உள்ளத்தியற்கை நூலோ உறுப்பின் செயலாகக் கருதாது தனிப்பட்ட மகனின் செயலாகக் கருதி ஆராய்கின்றது.

தமிழ்ப் பாடம் 95.

[அஷ்ட பிரபந்தம்.]

[833-வது பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத்தந்தாதி.

ஐய மருந்திவை யுண்ணென்று மாதரட் டூட்டுஞ்செல்
ஐய மருந்திணைப் போதே யவரின்ப மாதலினால் [வம்
ஐய மருந்தியக் கங்குறு காமுன் னரங்கற்கன்பாய் 7.
ஐய மருந்தியும் வாழ்மின்கண் மேலுமக் கானந்தமே.

பதப்பிரிவு:—ஐய மருந்து இவை உண் என்று மாதர் அட்டு ஊட்டும் செல்வம் ஐயம் அரும் திணை போதே அவர் இன்பம் ஆதலின்ஆல் ஐ அமரும் தியக்கம் குறுகாமுன் அரங்கற்கு அன்பு ஆய் ஐயம் அருந்தியும் வாழ்மின்கள் மேல் உமக்கு ஆனந்தமே.

பதவுரை

"ஐய - எமது ஐயனே, இவை - இவ்வுணவுகள், மருந்து - அமிர்தத்திற்குச் சமானமானவை; உண் - உண்ணுவாய்," என்று - என்று உபசரித்து, மாதர் - மனைவியர், அட்டு - சமையல்செய்து, ஊட்டும் - சாப்பிடச் செய்கின்ற, செல்வம் - செல்வங்களெல்லாம், ஐயம் - நிச்சயமன்று;

அவர் - அம்மாதர்களால் வரும், இன்பம் - இன்பமானது, அரும் - மிகவும்சிறிய, திணைப்போதே - திணையளவுகாலமே நிற்கவல்லது; ஆதலினால் - ஆகையால்,

ஐ - கோழையானது, அமரும் - பொருந்துகிற அந்த, தியக்கம் - பிராணாவஸ்தையின் கலக்கம், குறுகாமுன் - வந்து அடைவதற்கு முன்னரே, அரங்கற்கு - திருவரங்கநாதரிடத்தில், அன்பு ஆய் - பக்தி உடையவர்களாகி, ஐயம் - பிச்சையெடுத்து, அருந்தியும் - சாப்பிட்டேனும், வாழ்மின்கள் - வாழுங்கள்; மேல் - மேலுலகத்தில், உமக்கு - இப்படிச் செய்த உங்களுக்கு, ஆனந்தமே - நிலையுள்ள ஆனந்தமே கிடைக்கும்.

கருத்து:—செல்வம் இன்பம் யாக்கை இவையொன்றும் நிலைஇல்லை. ஆதலால் இம்மைக்குரியவைகளில் கவனம் செலுத்திச்செலுத்தி ஆங்காலமெல்லாம் கழித்துச் 'சாங்காலத்தில் சங்கரா' என்பதில் பயனில்லை. பிச்சையெடுத்தாகிலும் பிழைத்துக்கொண்டு அரங்கனது பக்தியிலேயே ஈடுபட் டிருப்பீராயின் பின் மறுமையில் அழியாத ஆநந்தத்தை அடைவீர், என்பது இச்செய்யுளின் கருத்து.

விளக்கம்:—'ஐயமருந்தி' என்னும் எழுத்துக்கள் நான்கு அடியிலும் யமகமாய் வந்திருக்கின்றன. முதலடியில் அவை, ஐய மருந்து (இவை) எனப்பிரியும். இரண்டாம் அடியில், ஐயம் + அருந்தி(ணை), எனப்பிரியும். ஐயம், என்பது இங்குச் சந்தேகம் என்னும் பொருளுடையது. அந்தச் சொல்லின் ஈற்றிலுள்ள மகர மெய்யின்மேல், வருமொழி முதலிலுள்ள அகர உயிர் ஏற, ஐயமருந்திணை, என ஆகும். மூன்றாமடியில், ஐ அமரும் தி(யக்கம்) எனப்பிரியும். ஐ என்பது, கோழை என்னும் பொருளுடைய ஓரெழுத்தொருமொழி; அதன்பின் உயிர் வந்ததால் யகர உடன்படுமெய் தோன்றி ஐயமரும் என ஆயிற்று. நான்காம் அடியில், ஐயம் அருந்தி, எனப்பிரியும். இங்கு ஐயம் என்பது, பிச்சை என்னும் பொருளுடையது.

அத்தனை வேதனை யீன்ற வரங்கனை யைம்படைசேர்
அத்தனை வேதனை வாய்வைத்த மாயனை யாரணங்கோர்
அத்தனை வேதனை தீர்த்தானைச் சேர்க்கிலளாயிரஞ்சால்
அத்தனை வேதனை யப்புவள் சாந்தென் றனலரைத்தே

பதப்பிரிவு:—அத்தனை வேதனை ஈன்ற அரங்கனை ஐம் படை சேர் அத்தனை வே தனை வாய் வைத்த மாயனை ஆர் அணங்கு ஓர் அத்தனை வேதனை தீர்த்தானை சேர்க்கிலள் ஆயிரம் சால் அத்தனை வேது அனை அப்புவள் சாந்து என்று அனல் அரைத்து ஏ.

பதவுரை

அத்தனை - என் தலைவனை; வேதனை - பிரம்மனை, ஈன்ற - பெற்ற, அரங்கனை - திருவரங்கனை; ஐ - ஐந்து, படை - ஆயுதங்கள், சேர் - தங்கிய, அத்தனை - கைகளை உடையவனை; வே தனை - புள்ளாங்குழலை, வாய் - தன்வாயில், வைத்த - வைத்து ஊதிய, மாயனை - மாயனை; ஆர் - அருமையான, அணங்கு - பெண்ணாகிய பார்வதியை, ஓர் - ஒரு, அத்தனை - பாதியாகஉடைய சிவபிரானது, வேதனை-துன்பத்தை, தீர்த்தானை - தீர்த்தவனும் ஆகிய அப் பெருமானை, சேர்க்கிலள் - என்னுடன் சேர்க்காதவளாகி, அனை - என்னுடையதாய், சாந்து - சந்தனம், என்று - என்று பொய்யாகச் சொல்லிக்கொண்டு, அனல் - நெருப்பை, அரைத்து - அரைத்து, ஆயிரம் - ஆயிரம், சால் அத்தனை - சால் அளவு, வேது - வியர்வைதரும் வெப்பமருந்தை, அப்புவள் - என்மீது பூசுவாள். (நான் எவ்வாறு ஆற்றுவேன்)

கருத்து:—கவி, இங்குத் தன்னையோர் பெண்ணாகப் பால்மாறிப் பாவித்துக்கொண்டு, அரங்கன்பால்ஆராத காதலுடைய நிலையில் அவனைப் பிரிந்திருக்கக் காமக் கனலால் கொதிப்புண்டு வருந்தவும் அதனை அறியாத அன்னை, கோடைக்காலத் தாபம் பொறுக்காமல் வருந்துகின்றாளிவள் என மதித்து, சந்தனம் முதலிய பூசித் தணிவிக்க முயல்வதும், அவ்வாறு செய்வதால் தனக்கு வருத்தமே அதிகரிப்பதும் தோழியுடன்தான் கூறி இரங்குவதுபோல், திருவரங்கநாதனிடம் தனக்குள்ள பக்தியைப் பேசுகின்றார்.

விளக்கம்:—'அத்தனைவேதனை', என்பன அடிதோறும் வந்துள யமக வெழுத்துக்கள். இவை,

முதலடியில்—அத்தனை வேதனை, என இரண்டு வார்த்தைகளாகப் பிரியும். முதல்மொழி, தலைவன் என்னும் பொருள் உடைய அத்தன் என்பது, இரண்டாம் வேற்றுமை உருபு ஐ யுடன் சேர்ந்து, அத்தனை என ஆயிற்று. அடுத்தமொழி, பிரம்மன் என்ற பொருளுடைய வேதன் என்பதன் இரண்டாம் வேற்றுமை.

இரண்டாம் அடியிலும்—அத்தனை வேதனை, என முன்போலவே பிரியும். ஹஸ்தம் என்பதற்குச் சமஸ்கிருதத்தில் கை என்ற அர்த்தம். ஹஸ்தம் உடையவன் ஹஸ்தன். தமிழில் ஹ விர்க்குப் பதிலாய் அ வும்,

ஸ விற்குப்பதிலாய், த வும் வருமாகையால், (ஹாரம் - ஆரம், ஹரி - அரி, சாஸ்திரம் - சாத்திரம், புஸ்தகம் - புத்தகம்) ஹஸ்தன் என்பது, அத்தன் என ஆயிற்று. அது இரண்டாம் வேற்றுமை உருபு பெற்று 'அத்தனை' என இங்கு நிற்கின்றது. வேதனை என்ற சொல், 'வே தன் ஐ' என்ற உறுப்புக்கள் சேர்ந்து ஆயிற்று. மூங்கில் என்ற பொருளுடைய 'வேய்' என்னும் சொல் விகாரப்பட்டு வே, என்று நிற்க, அது இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்கும் போது இடையில், தன் என்னும் சாரியை வரலாயிற்று சொற்கள் வேற்றுமைஉருபு ஏற்கும்போது சாரியைகள் வந்தாலும் வரலாம் என்று முன் (1வது வால்யூம், 949வது பக்கம்) சொல்லியிருக்கின்றோம். அத்து, து, கு, உ என்பனபோல், தன் என்பதும் சாரியையாக வரக்கூடும். நகரில் என்றும் நகர் தனில் என்றும், நகர் என்ற சொல்லோடு ஏழாம் வேற்றுமை உருபாகிய இல் சேரும்போது 'தன்' என்னும் சாரியை பெற்றும் பெறாமலும் வருவதுபோல், பெரும்பாலும் சொற்கள் எந்த வேற்றுமை உருபோடு சேரும்போதும் இந்த 'தன்' சாரியைப் பெற்றாலும் பெறலாம், பெறாம லிருந்தாலும் இருக்கலாம்.

மூன்றாமடியிலும்—அத்தனை வேதனை, என இரண்டு சொற்களாகவேபிரியும்; அர்த்தம், என்பதற்குச் சமஸ்கிருதத்தில் பாதி என்பது பொருள். பாதியாகவுடையவன், அர்த்தன்; இது தமிழில் (முன், அனர்த்தம் என்பது அனத்தம், என்று ஆனது போல்—5 வது செய்யுள்) அத்தன், என ஆயிற்று. அதன் இரண்டாம் வேற்றுமை அத்தனை. வேதனை, என்பது துன்பம் என்ற பொருளுடைய வடமொழி வேதநா, என்பதிலிருந்து ஆனது. இது இரண்டாம் வேற்றுமைத்தொகை. ஈற்றிலிருக்கும் ஐ வேற்றுமை உருபன்று—உருபுபெற்றால் வேதனையை என்றாகும்.

நான்காமடியில்—அத்தனை வேது அனை, என மூன்று சொற்களாகப் பிரியும். முதற்சொல், அவ்வளவு என்ற பொருள் உடையது. வேது, என்பது வைத்தியத்தில், வியர்வை பெருகுவதற்காக கொடுக்கும் மருந்துவகைகளின் பெயர். நாயகனோடு சேர்ந்திருக்கும்போது இன்பந்தருகின்ற பொருள்களில் சந்தனம் ஒன்றாகையால் அதுவும் மற்றவைகளைப்போலவே, நாயகனைவிட்டுப் பிரிந்திருக்கும் நிலையிலிருப்போர்க்குக் காமக்கனலை அதிகப்படுத்தித் துன்பம் செய்கின்றது. ஆதலால் பெண்ணாய் வருந்துகின்ற கவி சந்தனத்தை இங்கு, வெப்பத்தை மிகுவிக்கும் வேது எனப் பேசுகின்றார் அனை, என்ற மூன்றாவது சொல் 'அன்னை' என்பதன் விகாரம்.

அக்கர வம்புனைந் தாரய னாரிடை யாயிருநால்
அக்கர வம்பு மலராள் கொழுந னரங்கன்செங்கோல்
அக்கர வம்புயன் றான்மூல மென்ப தறிவித்திடான்
அக்கர வம்புவி மேல்வே ழமேவெளி யாக்கியதே. 9.

பதப்பிரிவு:—அக்கு அரவம் புனைந்தார் அயனார் இடை ஆய் இரு நால் அக்கரம் வம்பு மலராள் கொழுநன் அரங்கன் செம் கோலம் கரம் அம்புயன் தான் மூலம் என்பது அறிவித்துஇடான் அ கரவு அம் புவி மேல் வேழமே வெளி ஆக்கியதே.

பதவுரை.

அக்கு - எலும்பையும், அரவம் - பாம்பையும், புனைந்தார் - அணிந்தவராகிய சிவபிரானுக்கும், அயனார் - பிரம்மனுக்கும், இடை ஆய் - நடுவில் இருப்பவர் ஆகி; இருநால் - எட்டு, அக்கரம் - (நமோ நாராயணாநம:) என்ற எழுத்துக்களாலமைந்த மந்திரத்திற்கு உரியவனும்; வம்பு - வாசனை உடைய, மலராள் - தாமரைமலரில் இருக்கும் திருமகளுக்கு, கொழுநன் - நாயகனும்; செம் - சிவந்த, கோலம் - அழகிய, கரம் - கைகளாகிய, அம்புயன் - தாமரைகளையுடையவனும் ஆகிய, அரங்கன் - திருவரங்கன், தான் - தானே, மூலம் - ஆதி மூலம், என்பது - என்னும் உண்மையை, அறிவித்திடான் - ஒருவருக்குந் தெரிவிக்காமல் மறைத்துவைப்பான்; அ - அந்த, கரவு - இரகசியத்தை, அம் - அழகிய, புவிமேல் - இந்த உலகில், வேழமே - கஜேந்திரன் என்னும் யானையே, வெளி ஆக்கியது - யாவரும் அறியும்படி வெளிப்படுத்திவிட்டது.

கருத்து:—பிரமன் சிவன் ஆகிய மற்றிரு கடவுளர்க்கும் தானே முதல்வனாயிருந்தாலும், அதனை உலகத்தவர் அறிந்தால் தாழ்ந்தவர்களென்று அவர்களை நன்கு மதிக்கமாட்டார்களென எண்ணித் திருமால், அவ்விருவரையும் தன்னை மதிப்பதுபோலவே உலகத்தார் மதிக்கவேண்டும் என்ற பெருந்தன்மையோடு சிவனை ஒருபுறமும் பிரம்மனை மறுபுறமும் சமமாக வைத்துக்கொண்டு வெகுகாலம் தன் இரகசியத்தைக் காத்து வந்தாரானாலும், கஜேந்திரன், 'விஷ்ணுவே' என்று அழைக்காமல், ஆதிமூலமே என்று அழைத்தபோது, திருமால் துன்பமுற்றவர்களைக் காக்கவேண்டுமென்ற விரைவில் தன்இரகசியத்தை மறந்து 'ஏன்' என்று அப்பெயர்க்கு எதிர்கூறி வந்துவிட்டதால், 'திருமாலே மூலப்பொருள், மற்றிருவரும் இவருக்கு இணையல்லர்" என்பதை யாவரும் அறிந்துகொண்டனர், என்று கவி மிகவும் நயமாக இச்செய்யுளில் கூறுகின்றார்.

இலக்கணம்

யகர வகர மெய்கள் உடன்படுமெய்யாக வருகின்ற இடங்களைப்பார்த்தோம். இனி, அவ்விடங்களை யல்லாமல் வேறு சில இடங்களிலும் யகரமெய்யும் வகரமெய்யும் தோன்றலாம். எனினும், இதுகாறும் சொல்லி வந்த விதிகளுக்குஇணங்கியபடி நிகழ்கின்ற புணர்ச்சியில் வருகின்ற யகர வகர மெய்களையே உடம்படுமெய் என்று அழைக்கின்றனர். அவ்வாறன்றி இனி நாம் சொல்லப்போகின்ற புணர்ச்சிகளில் தோன்றும் யகர மெய்யையும் வகர மெய்யையும் உடம்படுமெய் என்று அழைப்பதில்லை. அப்படி, உடம்படுமெய்யாயிராமல் யகர வகர மெய்கள் தோன்றுவது பின்வருமாறு:—

i. அம்மனிதன், அவ்வரசன் (அ அரசன்) என அகரம், ஒரு பொருளைச் சுட்டிக்காட்ட வருகின்ற இடைச்சொல் லாகும். இது செய்யுளில் சிற்சில சமயம் ஆ என நீண்டு ஒலிப்பது முண்டு. அப்படிப் பாட்டில் நீண்டிசைக்கும்போதும் அது சுட்டு இடைச்சொல்லே. நிலைமொழி இந்தச் சுட்டு நீண்ட 'ஆ' என்னும் இடைச்சொல்லாக இருந்து வருமொழி முதலில் உயிரும் வந்தால், 'ஏனையுயிர்வழி வவ்வும்' என்பதற்கிணங்கி வகர உடம்படுமெய் வராமல், யகர மெய் வரலாகின்றது:—

ஆ + இடை = ஆ ய் இடை = ஆயிடை. (அந்த இடம், என்பது இதன்பொருள்) என்று செய்யுள்

களில் வருகின்றது. (ஆ + இடை = ஆவிடை, என ஆவதில்லை). இந்த ய் உடம்படுமெய்யன்று. ஆதலின் இதற்கு விதி கூறும்போது, "அ, என்ற சுட்டு ஆ என்று நீண்டு ஒலிக்குங்கால், அதன்பின் உயிர் வருமாயின் யகரமெய் தோன்ற அம்மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறும்'' என்று சொல்லவேண்டுமே யன்றி 'யகர உடம்படுமெய்' வந்தது என்று சொல்லப்படாது.

சுட்டு நீண்ட ஆ என்னும் இடைச் சொல்லிற்கே இந்தவிதி பொருந்தும். பசு என்னும் பொருளுடைய பெயர்ச்சொல்லாய் வரும்போது 'ஆ' என்பதுடன் வருமொழி முதல்உயிர் புணருங்கால், ஏனை உயிர் வழிவவ்வும் என்ற விதிப்படி வகரமே உடம்படுமெய் யாகவரும்:—ஆ + ஓடியது = ஆவோடியது. ஆ + ஈன்றது = ஆவீன்றது.

ii. அ, இ, உ, என்ற மூன்று எழுத்துக்களும் வேறொரு சொல்லோடு சேர்ந்து சுட்டிக்காட்டப் பயன்படுமிடங்களில் அவ்வெழுத்துக்கள் சுட்டு இடைச் சொற்களாகி விடுகின்றன:—

அவ்வெண்ணம் (அ எண்ணம்). இவ்வொட்டகம் (இ ஒட்டகம்.) உவ்வானை (உ ஆனை).

(அ, என்பது தூரத்திலிருப்பதையும், இ என்பது சமீபத்திலிருப்பதையும், உ என்பது தூரமுமின்றிச் சமீபமுமின்றி இடையில் இருப்பதையும் சுட்டிக்காட்ட வரும்.)

அவ்விதமே, எ, என்னும் எழுத்து ஒரு சொல்லோடு சேர்ந்து, வினவுகின்ற பொருளைத் தருமாயின், அது வினாஇடைச்சொல் ஆகின்றது.

எவ்வரசன் (எ அரசன்.) எவ்வுலகம் (எ உலகம்) இந்த, அ உ என்னும் சுட்டிடைச் சொற்களும், எ என்னும் வினாஇடைச்சொல்லும் நிலைமொழியாயிருக்க, வருமொழி முதல் உயிரோடு அவை சேரும் போது வகரமெய் தோன்றும்:—

அ + ஆறு = அ வ் ஆறு = அவ்வ்ஆறு = அவ்வாறு.
உ + அரசன் = உவ் அரசன் = உவ்வ்அரசன் = உவ்வரசன்
எ + உலகம் = எ வ் உலகம் = எவ்வ்உலகம் = எவ்வுலகம்?

[அ + ஆறு, என்பன சேரும்போது வ், என்னும் மெய்யெழுத்துத் தோன்றுகின்றது. ஆகையால் நிலைமொழி அவ், என்பதுபோல் ஆக, அந்த வ் என்னும் உயிரின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறும்போது, தனிக்குறிலைச் சேர்ந்த வகர மெய்யின்பின் உயிர் வந்திருப்பதால், அந்த வகர மெய் இரண்டாக விரிந்து ஒன்று அப்படியே நிற்க மற்றது உயிரை ஏற்று உயிர்மெய் யாகின்றது. (இந்த விதியை 2வது வால்யூம் 613 வது பக்கத்தில் சொல்லியிருக்கிறோம்.) ஆகையால் அவ்வாறு என்று புணரலாகின்றது. உவ்வரசன், எவ்வுலகம் என்று ஆனதும் அவ்விதமே.]

இவ்வாறு, அ, உ என்ற சுட்டிடைச்சொல்லின் பின்னும், எ என்னும் வினா இடைச்சொல்லின் பின்னும் உயிர் வருங்கால், தோன்றுகின்ற வகரமெய், 'ஏனை உயிர்வழி வவ்வும்' என்ற விதியின்படியே தோன்றுகின்றதெனக் காணப்பட்டாலும், அந்த வ் 'கண்ட + அரசன் = கண்டவரசன்' என்பதுபோன்ற புணர்ச்சியில் வருகின்ற வ் எழுத்தைப்போல் உடம்படுமெய் ஆகாது. அவ்வாறு ஆக இயலாதென்பது இ என்னும் மற்றச் சுட்டிடைச்சொல்லைபற்றிப் பார்த்தால் தெரியவரும்.

இ + உலகம், என்பது இவ்வுலகம் என்று ஆகும். உடன்படுமெய் வருவதாயின் இ ஈ ஐவழி ய வர வேண்டுமாகையால் அச்சூத்திரத்தின்படி இய்யுலகம் என்றன்றோ ஆகவேண்டும். அவ்வாறு ஆகாமல், இவ்வரசன், இவ்விடம், இவ்வோலை, என வகரமெய்யே தோன்றலாகின்றது. எனவே, சுட்டிடைச் சொற்கள் உடம்படுமெய் வருகின்ற விதிக்கு இணங்கி நடக்காதபடியால், அவைகளின்பின் வருகின்ற வகர மெய்யை உடம்படுமெய் என்று கூறுவதில்லை.

iii. நிலைமொழி அ இ உ என்னும் சுட்டெழுத்துக்களில் ஒன்றாகவேனும், எ என்னும் வினாவெழுத்தாக வேனுமிருக்க, வருமொழிமுதலில் யகரவரிசையிற் சேர்ந்த எழுத்திருக்குமாயின், இவை புணரும் போது வகரமெய் தோன்றும். இதுவும் உடம்படு மெய் யன்று:—

அ + யானை = அவ்யானை. இ + யுகம் = இவ்யுகம். உ + யூகம் = உவ்யூகம், எ + யோசனை = எவ்யோசனை.

குறிப்பு:—இந்த நான்கு இடைச்சொற்களுக்குப் பின், உயிரேனும் யகர வரிசையைச்சேர்ந்த உயிர் மெய்யெழுத்தேனும் வருமாயின், வகரமெய் தோன்றும். மற்ற உயிர் மெய்யெழுத்துக்கள் வருமாயின், அந்த உயிர்மெய்யிலுள்ள மெய்யே தோன்றும். அ + காடு = அக்காடு, இ + நாய் = இந்நாய். உ + வனம் = உவ்வனம். எ + மரம் = எம்மரம்.

ஆனால், முன் சொன்னபடி யகரம்வந்தால் மாத்திரம், ய் தோன்றாமல் வ் தான் தோன்றும். அ + பெட்டி = அப்பெட்டி, இ + செடி = இச்செடி, உ + மலை = உம்மலை, எ + தாமரை = எத்தாமரை, என்று அந்தந்த வருமொழி முதல்மெய்யே தோன்றுவதுபோல், யகரம்வந்தால், யகரமெய்யே தோன்றாது. (வகரமெய்தான் தோன்றும்)

அ + யமகம் = அவ்யமகம் (என்று ஆகுமேயல்லாது அய்யமகம் என ஆகாது)
இ + யானை = இவ்யானை (இய்யானை அன்று)
உ + யோகம் = உவ்யோகம் (உய்யோக மன்று)
எ + யௌவனம் = எவ்யௌவனம் (எய்யௌவனம் அன்று)

iv மெய்யை ஈற்றிலுடைய சொற்களுக்குப் பின்னும் உயிர்வர, அவ்வுயிர் (மகன் + அழகு = மகனழகு; பல் + உடைந்தது = பல்லுடைந்தது.) என்பனபோல் முன்னின்ற மெய்யின்மேல் ஏறி உயிர்மெய் ஆகாமல், இடையில் வகரமெய் தோன்றிப் புணர்ந்திருக்கவும் சிற்சில இடங்களில் காண்கிறோம்:—

செல் + உழி = செல் வ் உழி = செல்வுழி
சார் + உழி = சார் வ் உழி = சார்வுழி
விண் + அத்து = விண் வ் அத்து = விண்வத்து.

இப்படிவருகிற வகரமெய்யும் உடம்படுமெய் அன்று. வகரமெய் தோன்றியது, என்றுதான் சொல்ல வேண்டும்.

குறிப்பு:—இலக்கியங்களில் ஒவ்வோரிடத்தில் இப்படி வகரமெய் தோன்றக் காண்கின்றோம் என்று கூறினோமேயல்லாது, நிலைமொழியிறுதியில் மெய்யெழுத்தும் வருமொழிமுதலில் உயிரும் வருமிடமெல்லாம் வகரமெய் தோன்றப் புணர்த்திவிடலாம் என்று எண்ணிவிடப்படாது. கல் + உளி = கல்லுளி, என்றேயாகும், கல்வுளி என ஆகாது.

நம்மாழ்வார் விபவம்.

இது மாத்திரமன்று. நம்மாழ்வார் பாசுரங்களைக் கொண்டே, எந்தத் திவ்யதேசத்திற்கும் அவர் போகவில்லை என்று கூற அத்தாக்ஷிகள் இருக்கிறன்றன. இவர் இருக்கை திருநகரியில் திருவெண்பதிசாரம் என்ற க்ஷேத்திரம் திருநகரத்துக்கு ஒன்றரை காதத்திலுள்ளது. இங்கேகூடத் தான் போகாமல் பிறர் தம்திறம் பகவானிடத்திலுணர்த்துவாரில்லை யென்று நோவுபடுகிறார். தான் சென்று விண்ணப்பம் செய்யாமல் பிறர் சொல்வார்இல்லை, "செய்வது என்'' என்று அரற்றுகிறார்:—

829-வதுபக்கத் தொடர்ச்சி.

"வருவார் செல்வார் வண்பரிசாரத் திருந்த என்
திருவாழ் மார்பவற்கு என்திறம் சொல்லார் செய்வது
உருவார் சக்கிரம் சங்குசுமந்து இங்கு உம்மோடு [என்
ஒருபா டுழல்வான் ஓரடியானும் உளனென்றே''

மேலும் 5-ம் திருவாய்மொழி 8-ம் பதிகம் 9வது பாசுரத்தில்,

"இசைவித்து உன் தாளிணைக்கீழ்
இருத்தும் அம்மானே,
அசைவில் அமரர் தலைவர் தலைவா!
ஆதிப் பெருமூர்த்தி!
திசைவில் வீசும் செழுமாமணிகள்
சேரும் திருக்குடந்தை
அசைவி லுலகம் பரவக்கடந்தாய்
காண வாராயே

என்று அழைத்துக் கூவி "உன்னைக் காண்பான் நான் அலர்ப்பாய் ஆகாசத்தை நோக்கி அழுவேன் றொழுவேனே'' என்கிறார். தான் நிற்கும் தலத்திலேயே எம்பெருமான் ஸேவை சாதிக்க ஆகாயத்தைப் பார்க்கிறாரென்றும், தான் சென்று தொழ எத்தனிக்கவில்லை என்றும் நன்கு இப்பாசுரத்தாலும் விளங்குகின்றது. இதுநிற்க, இவர் தபோநிலைமையைப்பற்றி இவர் திருவாய்மொழியி லாங்காங் குள்ளதை இவ்விடத்திலுரைப்போம்.

"வானுளார் பெருமான்தா னுமயானு மெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம். தேனும் பாலும் நெய்யும் கன்னலும் அமுது மொத்தே'' என்பர்:— "அறியாமா மயத்துள் வைத்து'' "எனதாவியுள் கலந்து'' "அறியா காலத்துள்ளே'', (அதாவது இளமைப் பருவத்திலேயே) "அடிமைக்கண் அறுபு செய்வித்தாய்'' என்பர். "எனது அகவுயிர்க் கமுதே'', "உள்ளம் உகஉருகி உள்ளுளே நின்றவனே'' என்பர். "என் முடிவு காணதே என்னுள் கவர்ந்தானை'' என்பர். ஆழ்வாரைத் தலைவியாகவைத்துச் செவிலித்தாய், "இயல்வாயின வஞ்சநோய் கொண்டுலாவும் ஓரோ குடங்கைக் கயல்பாய்வன பெருநீர்க் கண்கள் தன்னொடும்'' "மனத்தோ டென்னுங்கொல் எங்கோல் வளைக்கே'' என்று அலற்றிய பாசுரம் திருவிருத்தம் 24. "மாழைநோக் கொன்றும் வாட்டான்மினை'' என்றிவன் உரை திருவாய்மொழியிலே.

"ஒற்கமொன்று மிலள் உகந்துகந்து உள்மகிழ்ந்து குழையுமே'' என்றும் "இருந்திருந்து அரவிந்த லோசன! என்றென்றே நைந்து இரங்குமே'' என்றும் தோழிபாசுரம்:

" இன்கவி பாடும் பரம கவிகளால்
தன்கவிதான் பாடு வியாது—இன்று
நன்குவந்து என்னுடனாக்கிஎன் னால்தன்னை
வண்கவி பாடும் வைகுந்த நாதனே''

என்றும்

" இங்கு மங்கும் திருமாலின்றி யின்மைகண்டு
அங்ஙனே வண்குருகூர் சடகோபன்
இங்ஙனே சொன்ன ஓராயிரத்திப் பத்தும்
எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்குமே''

என்றும்

189078

" உருகு மாநெஞ்சம் உயிரின் பரமின்றிப்
பெருகுமால் வேட்கையும் என்செய்கேன்
[தொண்டனேன்''

"நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து என்னை
ஈர்மைசெய்து என்னுயிராய என்னுயிருண்டான்''

என்றும்வருவனஒன்பதாம் திருவாய்மொழிப்பாசுரங்கள். அதிகம் விபரம் கூறுவதற்கு அவசியமில்லை. சுருங்கச்சொல்லின், முதல்திருவாய்மொழி ஐந்தாம்பத்து "வலவேழுலகு'' என்கிற தசகத்தில் ஆழ்வாருக்குப் பகவான் ஸர்வஸேதர மாசியங்களுடன் தர்சனம் கொடுத்தார் என்றால், இவர் தபோவலிமையின் ஏற்றம் உரைக்கவும் வேண்டுமோ ? முன்னர் நாம் குறித்தபடி இவருடையதிருவுடம்பிலும் அவன் மருளுற்றுங்காதலின் வற்புறுத்தலால் அகல மனமில்லாதானை அவர் அகல வேண்டிக்கொள்ள அவர் திருவுடலத்தை விட்டொழிந்தான். இங்ஙனேயா யிருந்தது இவர்தம் கூட்டுறவு.

வைணவ தத்துவம் அநாதிகாலம்முதல் தொன்று தொட்டுவரினும் இக்காலத்த வைணவம் (Later day Vaishnavitism) இவ்வாழ்வாரையே தலைக்குருவாக அமைந்துளது. "ஆததியவிய நகுலபதே வகுளாபிராமம், பிரநாமி மூர்த்தநா'' என்பது இவரை ஸேவை செய்து சாற்றும்மந்திரம். அதாவது முதல்குலபதி சீர் பாதங்களைத் தலைகளால் வணங்குவோ மென்பது. "குலபதி'' என்றால், ஐயாயிரம் பதினாயிரம் கணக்கான ஸமூஹங்களுக்குத் தலைவன் என்று பெயர். இப்பட்டம் வாய்ந்தவரில் நமக்குத் தெரிந்தவளவில் பின் ரிஷிகளில் சௌநகர். மஹாபாரதத்தை நைமிசாரணியத்தில் (Nanital) பிரசுரப்படுத்திய இருடிகள் மாத்திரமே உளார். இவரின் தத்துவ உணர்ச்சிகளை விமர்சிக்கும்போது இவ்வஸாதாரண ஏற்றம் தகுமென்று புலப்படுகிறது. இவர் லோகாசாரியராய் விளங்குவதற்குத் தகுதி வாய்ந்தவர். பின்னர் இதைப்பற்றி உரைப்போம். தற்காலம் இக்காலத்தில் நடையாடும் விபாகம்-அதாவது சங்கரபகவான் வியாஸைச் சூத்திரத்தின் உரைகாரர் சைவருக்கே வாய்ந்தவரென்றும், நம்மாழ்வார் வைணவர்க்கே உரியவரென்றும் கொள்கையாகிற காலபேதம் தத்துவத்துக்கும் உண்மைக்கும் பொருந்தாது. இவர்கள் எக்காலத்தும் எல்லாருக்கும் உரியர். இவரது சீரிய கிரந்தங்களையும் எல்லாரும் ஜாதி வர்ணம் முதலிய பேதங்களைக் கொண்டு தள்ளாமலும் அஃகாமலும் கற்பாராயின் தன் னன்னலத்தை நாடினவர் ஆவர். ஆழ்வாரிடத்தில் யாம் கடன் பட்டுள்ளோம். ஆயினும் அக்கடனைச் செலுத்தக் கைமுதல் எம்மிடத்தில் சிற்சிலவே யுள.

இக்கலாநிலயமாம் பத்திரிகை எமக்குஇடங்கொடுத்து வாழ்விக்கஉளதெனினும் எம்வயது மூப்பாலும்அமைதிக்குறைவாலும் பிறர்க்குப் போதிக்கும் சொல்லாற்றல் வாய்மை திறமையுளே னல்லேன் — வயசு பிரயுக்தமாகஉள்ள மனத்தளர்ச்சியும் ஒருவாறு சிதைத்து நிலைதளர்க்கின்றது. ஏவலாளர்களும் குறைவு - சம்பிராதயங்களை ஆராய்ச்சி செய்யாமல் எழுதத் துணிவேனு மல்லேன். பிரம்மாண்டத்தி னமைப்பு - (Cosmogony) மனிதரின் மனநிகழ்ச்சி புறம்புள்ள வஸ்து தத்துவங்களோடு பரிநிமித்து ஸாபேக்ஷத மூளதென்னும் உண்மை (Relativity of Human Knowledge including Einsteen's present day speculation), வேதாந்த தத்துவங்களின் உணர்ச்சி- The eternal verities மானிடரின் மனப்பகுதிபால் ஸர்வசூனிய வாதத்தை அறிய ஆற்றாமை - (The psychological impossibility of postulating an absolute negative), இதுபோன்ற பற்பல அருமையான உண்மைகளில் தற்காலம் உலகம் பாராட்டி மேம்பாடாகத் தாங்கும் (up to date) தத்துவங்களை இவர்கண் கூறவேண்டி அருளிச்செய் திருக்கிறார். விருந்துக்குப் போவாருங்கு அது இது தின்பண்டங்கள் பக்ஷணிக்கக் கிடப்பதாக அறிவு மூட்டுவது உசிதமே. சிலர் இதைப்படிப்பவர், இவர் சம்மாற்றல் கூறவந்த டம்பரோ வம்பரோ என்றும் கருதுவாராவர்—எத்திறமைத்தவ ராயினும் எதிலும் மெய்ப்பொருள் காண்பார் அரிதாகலின் ஒருவாறு இனி யாம் சமைக்கும் மனைவிருந்தில் பலஹாரங்களும் (Sweets) காரக்ஷாரங்களும்—(Savory) உளவென்றும் அவைகளில் நாக்குத்தீண்டும் வரையில் எழுதுபவர் பொய்யரல்லர், சிற்சில நன்மையும் இவர் வரையும்வியாஸத்தில் காணஉளவாயிருக்குமென்றும் அமைதியுடன்காத்திருப்பாராக. "பலஹாரம்" என்ற பதத்திற்கு- "காரக்ஷாரவர்ஜ்ஜியம்" - தர்மசாஸ்திரத்தில் உப்புகாரமில்லாமை என்று பொருள். அதாவது தனிமதுரம் Sweets காரக்ஷாரமோ நாவுக்கு வாய்ந்தது Savory—என்று கூறவேண்டியதில்லை.

இவ்வாறு மாட்சிமைதங்கிய இவ்வாழ்வாரின் கிரந்தங்கள் திருக்கோவில்களில் சாற்றிவருவரேனும் ஒருவாறு ஒளிமழுங்கியே நடைபெற்று வருகிறது. இதற்குக் காரணம் வைணவரின் பெரும்பகுதியாகிய வடகலையார் இவைகளின் ஆட்சி உரியவரேனும்ஆதரவு செய்துவிட்ட குறை தமிழ்ப்படிப்பின் கஷ்டமும் ஸம்ஸ்கிருத கிரந்தங்களில் உள்ள சாத்திர தத்துவமும் இவைகளில் உளவாதலால் இவைகளையும் படித்துணர்தல் விபர்த்தமென்றும் உள்ள நினைவு பெரிய குற்றம். இக்கிரந்தங்களுக்கு வைதீக மந்திரங்களுக்குப்போல் ஏற்றிவிட்டஏற்றமேமந்திரங்களை வாயுருக்கொண்டு சொல்வதல்லாமல் தத்துவ விசாரத்துக்கு உள்ளாக்குபவர் உளரோ! அங்கதியே, அதுபோல் பாவிக்க எற்பட்ட இக்கிரந்தங்களுக்கும் தொடர்ந்தது.

நான்முகற்குப் பூமேல்பகர மறைபயந்த பண்பன்- பெயரினையே புந்தியால் சிந்தியாது ஓதியுருவெண்ணும் சந்தியா லாம்பயன் என்? என்றல்லவோ பொய்கையாழ்வார் பாசுரம்.

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

(830 வது பக்கத் தொடர்ச்சி)

இராசசூயச் சருக்கம்.

பின்னிய குஞ்சிக் கோவலர் பயந்த
பேதையர் பலரையுங் களிந்த
கன்னியின் மருங்கு மோரையின் மருங்குங்
கலையெலா நாணிடக் கவர்ந்தே
முன்னிய வின்பச் செருக்கிலே மயக்கி
மூரிவிற் காமனு மானு
னன்னிய னல்லன் மற்றிவன் பெருமை
யரசரி லாரறி யாதார்.

[பின்னப்பட்ட குடுமியோடுகூடிய இடையர்கள் பெற்றெடுத்த கபடமற்ற பெண்கள் பலரையும் யமுனாதிக்கரையிலும், அவர்கள் விளையாடுமிடங்களிலும் சென்று அவர்களுடைய ஆடைகளை அவர்கள் வெட்கும்படி எடுத்துப்போய், தானெண்ணிய சிற்றின்பத்திலே யவர்களை மயக்கி, அவர்களுக்கு வலியுடைய மன்மதனுமானான்; இவன் அயலான் அல்லன்; இவன் பெருமையை அரசர்களில் அறியாதவர் யாரிருக்கின்றார்கள்]

முன்னம் மச்சங்களுட னுறவாடி யவைகளைக் காப்பதாய் நடித்து அவைகளைக் கொன்றுதின்ன கொக்கேபோல், யாதவருடன் குலவி யவர் இல்வாழ்க்கைக் கிழுக்குண்டாக்கியவ னிவன் காணீர். துரும்புக்கு நெருப்பின் சேர்க்கை நில்லாததுபோல், யாதுமறியாத பேதையர்க்குக் கொடியனாகிய விவனுறவு துன்பத்தையே விளைவித்தது. ஆநிரை புரக்கும் கோவலர் மருட்சியுடையோ ரென்பது, மூத்துமவர் குடுமியைப் பின்னிக் களிப்பதா லேற்படுமே. அன்னார் பயந்த மகளிர் பேதையரென்பது சொல்லாமலே யமையும். தக்கவின்ன தகாத வின்னவெனவுன்னுந் திறமையற்றவம் மடந்தையரை மயக்கியும், ஆடவர்கண்களிற் படாமற் றனியிடஞ்சென்று நீர்விளையாடு மகளிரிடைக் கள்வனேபோன்று கரந்துசென் றன்னார் கலைகளைக் கவர்ந்தும், நாணத்தாலு மச்சத்தாலு மவரிவன் வலிந்துரைத்த வழிகளுக் குடன்படும்படி செய்தது ஆண்மையோ, வீரமோ? அங்ஙனந் தனியிடத்தி லவரை வற்புறுத்திப் பழகியபின்னர், அவர் விளையாடுங் களங்களிலும் விடாது சென்று, அவர் மனந்திரும்பியுய்ந்துபோம் வழியைத் தடுத்து, அவரைப் பிழையிலுழலச்செய்து, மறத்திற் காளாக்கிவைத்த மனிக்குண சீலனிவன்!

சிற்றின்பம் வேம்பென்னுங் கன்னிய ரிவன்னினருள்பெற்றபின் னின்பத்திற் றிளைத்து, அதுதே வீடுபேறென மயங்கி, அதனாற் செருக்குற்று, தாவ தந்தையர் சொற்கேளாமற் கணவரையிகழ்ந்து, தருக்கித் திரிந்ததற்குக் காரணனா யிவனே அரசரில் முதன்மைபெற்றவன்? இவனைக் கடவுளெனவெண்ணி இவன்சேர்க்கையால் மகளிர் புனித ராணரென்றும் ஆரணங்களிற் சொல்லியுள்ளவாறு அன்பு செலுத்த வேண்டிய விடமாகிய இறைவனிடத்தேதா னம் மடந்தைய ரன்பு செலுத்தினாராதலா லது குற்றமன்றென்றும், பரமாத்மா இவர்களிடத்தும் இவர்தங் கணவரிடத்து மியல்பிலே யுள்ளுறை பொருளாதலால், இவனது சேர்க்கையாற் புதுமை யொன்று மேற்படவில்லை யென்றும் பிதற்றுவார் பிதற்றுக. கடவுளாயின், மானிடப்பிறவி யெடுத்தபின்னர் மனிதவியலிற் கட்டுண்டவனாய், அறநெறி கடவாது, பிறர்க் கெடுத்துக்காட்டான நடையுடை யுடையனா யன்றோ இருக்கவேண்டும்? அதையொழித்து இன்பவயத்தனாய்த் திரிபவன் கடவுளென் றெண்ணத்தக்கவ னல்லன். அவன் மானிடனே. அம்மானுடருள்ளும் கடையாய காமி இவன். வேற்றாரா னாயி னிவனியற்கை யறியாது சொன்னீரெனக் கருதுதற்குண்டு. அவ்வா றவன் அந்நிய னல்லன். அவ னுள்ளூரானே. இவன் விடயங்களையெல்லாம் முற்றுமுணர்ந்தமுனிவ னிவனை முதன்மை பெற்றவ னென்றது பேதமையே.

அண்டர்க் கெல்லா மரசான
வாகண் டலனுக் கண்டரினி
துண்டற் கமைத்த பாலடிசி
லுண்டா னொருநா ளொருதானே
கொண்டற் கன்மா ரியைமுன்னங்
கோவர்த் தனமே குடையாகச்
சண்ட ப்ரசண்ட வேகமுடன்
றடுத்தா னேறு படுத்தானே!

[வானவர்களுக்கு எல்லாம் அரசனான இந்திரனுக்கு யாதவர் உண்ணும்பொருட்டுத் தந்த பால்சோற்றை ஒரு நாள் அவனே தானு யுண்டான்; அதனால் இந்திரனாலே ஏவப்பட்ட மேகங்களாலுண்டான கல்மழையைக் கோவர்த்தன கிரியைக் குடையாகக்கொண்டு வெகு வேகத்தோடு தடுத்தான்; எருதுகளையுங் கொன்றான்.]

பெண்களைத் தன்வயப்படுத்தியபின், நாளடைவில் அவருதவியால், வெளுத்ததெல்லாம் பாலென்றெண்ணும் பேதையரான பொதுவரையும் தனக்கடங்கப் பண்ணி, அவர் வழிவழியாய்த் தொழுதுவந்த விந்திரனை வணங்காவண்ண மிவன் செய்தனன். இந்திரனோ அசுரனல்லன்; அவன் தேவர்களுக் கரசன்; எவராலு முயர்ந்தோனெனக் கொள்ளப்படுவன். அவனுக்குப் பகையாய் அவனை யெதிர்த்து நின்றவன் உயர்ந்தோனென் றெண்ணப்படுவ தெங்ஙனம்? அவ்வாறு இடப்பட்ட வுணவைத் தானே ஒருருவெடுத்து யாவருங்காண வுண்டானெனில், அவன் பேயனென்பதற் கேதையம்?

"அஹம் ஹி சர்வ யஞ்ஞானும் போக்தா சப்ரபுரேவச,

[நானே எல்லா யஞ்ஞங்களையும் உண்பவன்; மேலான பிரபுவும் நானே]

என்னும் உண்மையை வெளிப்படுத்த அங்ஙனஞ் செய்தானென்று சொல்பவரெல்லாம் அறியாதாரே. ஆணவமலத்தை யொழிக்காதவனாய்த் தானென்னும் மமதைகொண்டு திரிபவனை உயர்த்திவைப்பது ஏதுக்கு? அகங்காரத்தின் பய னுடனே யவனுக்குக் கிடைத்துவிட்டது. இந்திரனும் மேகங்களையேவிக் கன்மாரி சொன்மாரியெனப் பெய்தான். பெய்யவே தன்னாற் கேடுற்ற இடையரைக் காக்கவேண்டி, உள்ளத்தி லச்சங்கொண்டு, சாபம்பெற்ற வொருவனைப்போல் கல்லு மலையுந் தாங்கி நின்றான். கன்மாரியைக் கற்கொண்டு தடுத்தான்; அப்புமாரியை யம்புகொண்டு தடுத்திருப்பானென்று வன்மையோ டுரைப்பவர் கிடக்க, அவர் உயர்ந்த வெண்ணங்களில்லாது அடிமைத் தன்மையெய்தி அவனடியிற் பொடியாய்க் கிடந்துழல வெண்ணுமறிவிலிகளே! இவன் செயல்களிம்மட்டோ? நப்பின்னைப்பெண்ணை யவாவிப் பித்தன்செய்த செய்கைகளைக் கேட்டிலரோ? மண்ணை யவாவிக் கிளைஞரைக் கொன்றானென்றாற் பெண்ணையவாவிப் பெற்றங்களை வதைத்தான். தன்னலம் பாராட்டு மிவனுக்கிடையூறு யுற்றவர் மனிதராகுக; அன்றி யவை விலங்குகளாகுக. தன் முன்னேற்றத்திற்குக் குறுக்கிடும் பிராணிகளனைத்தையும் சற்று மிரக்கமின்றிக் கொல்லும் வன்கணாள னிவன் காண்மின். 'தடுத்தானீறு படுத்தான்' என்னும் பாடமுமுண்டு. அதற்கு ஈறுபடுத்தான், என்றாவது நீறு படுத்தான் என்றாவது கொண்டு கன்மாரியை அழித்துக் கெடுத்தா னென்று பொருள் கொள்க.

இதுவரை யெழுசீர் விருத்தங்களாய்ச் சொல்லிவந்த வாசிரியர், இதுமுதன் மூன்று கவிகளை, முன்னரே யெடுத்திங் காட்டியுள சில செய்யுட்களைப்போல், மூன்றாஞ்சீரு மாறாஞ்சீருங் காய்ச்சீர்களாயும், மற்றையவை ஈரசைச் சீர்களாயு மமைந்துள்ள அறுசீராசிரிய விருத்தங்களாய்ப் பாடினர். இச்சருக்கத்தில் பல்வேறு சந்தங்களமைந்த பல்வகையாப்புகள் பெற்ற பாடல்க ளாங்காங்கே விரவியிருத்தலை யன்பர் கண்டு கொள்வார். சிசுபாலனது சினம் ஆன்றோர் சினம் போலாறாது, மீண்டும் மீண்டும் புகைந்தெழுந்தது. ஆகையால் அதன் பின்னுஞ் சில வன்சொற்களைக் கூறினான். முன்னர்ப் பிரமன் கன்றுகளையும் கோபாலரையு மொளித்துவைத்தபோது, அவனைப்போன்றே பல யாதவரையும், ஆநிரைகளையும் படைத்தானிம் மாயாவி.

அதிரப் பொரும்போ ரஞ்சினனோ
வஞ்சா மைகொலோ தெரியாது
மதுரைப் பதியுந் தன்கிளையும்
வாழ்வுந் துறந்து வாரிதிவா
யெதிரொப் பிலாத துவாரகையென்
றியற்பேர் படைத்த மாநகரின்
முதிரப் பெரும்போர்த் தம்முனுட
னிருந்தான் பன்னாண் முரணறுத்தே.

[சராசந்தனோடும் காலயவனனோடும் நடுங்கும்படியாகச் செய்யும் போருக்கு அஞ்சியோ அஞ்சாமலோ அறியோம், மதுரைப்பட்டணத்தையும், தன் சுற்றத்தாரையும், வாழ்வையும் விட்டு, கடலிலே தனக்கு ஒப்புமையில்லாத துவாரகை யென்று இயற்பேர் பெற்ற நகரத்தில், அதிகமாய்ப் போர் செய்யும் தன் முன்னோனான பலராமனுடன் இருந்தான் பலநாள் பகைமை யின்றியே]

தனக்குரிய நாடுநகரம் சுற்றத்தா ரிவர்களை விட்டுப் பகைவர் வந்தனரென்று வேற்றிடம் புகுவது அச்சத்தாலோ அன்றி ஆண்மையாலோ யானறியேன். மன்றின்கட் டேங்கும் மத்தளத்தின்மேற் காற்று வீசலாலெழு மோசையே போர்ப்பறையென்று மகிழ்ந்து கேட்டுப் போர்க்கெழு மெனக்கு, முரசுகட்டிப் பிகுப்பவும், வால்வளை துவைப்பவும் அரசருடன் பொரு மடியேற்கு, சாம பேத தான தண்ட மெனுஞ்

சூழ்ச்சிக ளறியா யறிவிலியாகிய வெற்கு, புறங்கடைப் பகைவரைநாட்டிப், பிறிதொருவாயிலானே துவரைப் புகுதல் அஞ்சுதலோ அஞ்சாமையோ தெரிந்திலது. தன்னை யடுத்திருக்குஞ் 'சுற்றமும் வாழ்வு மகத்துமட்டே' யாதலா லவரை யகத்தேயேயிருத்தித் தான் துவரைப் புக்கனன்போலும். சுற்றமுழுவதையும் மாற்றார் சினத்திற் குள்ளாக்கி, முன்னேயோடி யொளித்தவனை யரசரில் முன்னாக வைத்தது கொண்டாடத்தக்கதே. 'அதிராச் சிறப்பின்மதுரைமூதூர்' என்றபடி பகைவரால் நடுக்க மில்லாமை தென்மதுரைக்கு மட்டுந்தானுண்டு. இவனாண்ட மதுரைக்கு இவன் செயலாலச்சிறப் பில்லாமற் போயது.

'பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகார்'

என்று, புகார்நகரம் பகைவர்க்கஞ்சிப் பதியினின்றும் பெயர்த்த லறியாத பழங்குடியை யுடையதென்பது போல், இவன் கிளையும் பதியெழுவறியாம லிருக்க மதுரையிலேயே குடிகளை விட்டேகினனோ? துவரை புக்கு நிலைத்திருப்பதும், பெரும்போர் புரியவல்ல அலாயுதவனைத் தன்னோ டுடையதாலேதான்.

இச் செய்யுளில்'தெரியாது' என்னுஞ்சம்பாஷணைக்குரியமொழியைச் சிறந்த காப்பியத்தி லமைத்தது ஒவ்வாது. இதுவும், முன் திரௌபதி மாலையிட்ட சருக்கத்திலும்,

எத்தனை யெத்தனை வேந்தராசைகூர யான்யானென்
றெழுந்திருந்தார் யானைபோல்வார்

என்று செய்யுணடையை வசனநடைபோ லெழுதியிருப்பதும், இன்னும் பிறவும், கவி ஒரே சமயத்தில் பலகவிகளைப் பாடிக் களைத்துப்போனபோது அருந்தமிழ் மொழிகளை ஆராய நோக்கமின்றி முதன்முதலில் மனதிற்குத் தோன்றியபடியே எழுதிவிட்டவைகளா யிருத்தல்வேண்டும்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

19. உலாவியற் படலம்.

835 ம் பக்கத் தொடர்ச்சி.

நிறையு முண்டோ விறைவனுக் கேதிரே.

அண்ணல் இராமனைக் காண்டொறுங்காண்டொறு மயோத்தியின் அரிவைமாரொடு மிதிலைவாழ் மங்கையர்களும் தம் மானஞ்சிதைந்த சிந்தையால் நாணும் நிறையுமுகுத்து வீதியில் வீழ்ந்து மொய்த்தல் தகவுதா னுடையவோர் செய்தியாமோ வென்னுமவ் வையத்திற் கமைதி தேடுவார், 'பரத்தையர் செய்கையே அது' என்று செப்புகின்ற மாற்றம் செவ்விதென் றெண்ணவொண்ணா வண்ணம் இவ்விருபெரும் நகரங்களின் அமைப்பும் நிகழ்ச்சியும் நேர்ந்திருக்கின்றன. பரத்தையர் குலத்தவ ரல்லாதார், கட்டழகுக் காளையைக் காணுமளவில் மையலால் அறிவுநீங்கி அவன்பின் ஓடித்திரிந்தாரெனின் அஃதவர் கற்பிற்கோர் தீராத இழுக்கேயாகும். மிதிலைமாநகரி வாழும் மாதரார்க்கு இவ்வசை வழங்காதவாறு, பரத்தையரன்றி மற்றவர் இன்னபடி அங்குப் புரிந்திலர் என்று புகல்வது பொருந்திய தில்லையெனினும், அவ்வா றுரைக்கப்புகும் உட்கருத்தி னுள்ளாழ்ந்து ஆராயுங்கால், இச்செயல்களின் உண்மையைக் குறிக்கும் மறைபொருளொன்று மேலெழுந்திரளலாகின்றது.

அடாதிது பெண்களுக் கென்னும் புணர்ப்பினால், மயல்வழி யுழலுமத் தொழில்களைப் பெண்மையின் வரம்பிகந் தொழுகுங் கணிகையர்க் குரிமையாக்கிய பெற்றியதவ் வமைதி. மன்னவர் மறுகினில் வைகுறுங் குலமுடை நன்னலந் திகழ்தரு நாரியர் தன்மையை, பழிப்புடைப் பரத்தைமைச் செய்தியென் றிழிவுறக் கழிப்பதனிலும், அருங்கலமனைய அம்மாதரை நற்குலமும் நாற்குணமும் வாய்த்தவர்களாகவே வைத்துக்கொண்டு, அன்னவரை இன்னவாறெலாம் புரியும்படி தூண்டினனாய் வீதியிற் சென்ற இராமனைத்தான் மானுடமகனென்ற தன்மை தவிர்ந்தவோர் தனிநிலைகொளநிறுவினால் பின்னிப்படலச்செயல்களில் இழிவேனும் இடரேனும் இல்லாதபரிசு எளிதிற் காணலாம். பெண்மையிற் குறைந்தாலன்று அன்றம்மாதர் இராகவன்பால் மாலுற்றுத் தொடரலாயினர். இராகவன் புருடர்களுக்கு ளுத்தமனாயதால் இவ்வண்ணம் நிகழலாயிற்று. இராமன் புருடோத்தமன் என்பதை மறவாக்கால், அம்மாதர் பரத்தையரென்று நினைக்கவேண்டா. தயரதன் புதல்வன் இவ்விராமனெனு மவ் வெண்ணத்தை நீக்கித் தனிமுதற்கடவுளே அவன் என்றபான்மையில் தன்னூல் முழுவதும் பாராட்டிவருகின்ற கம்பநாட்டாழ்வார் இக்கொள்கையை முற்றிய ஆர்வத்தோடு இவ்வுலாவினூடு ஆதரித்திருக்கின்றார்.

மானுடவிதிகளைக் கடந்ததெப் பொருளோ அதுவே கடவுள். மானுட விதிமுறைகள் வாம்பிலா ஆன்மாவை வரையறைக் குட்படுத்தி வைக்கின்றன. இவ்வித வரம்பிற் குள்ளாகியிருக்கின்றனர் மக்கள். அம்மக்கள் ஒருவரோடொருவர் ஊடாடும் நிலையிற்றான் இவ்விதிமுறைகளைக் கடவாநெறி கைப்பிடித்தல் கடமையாகின்றது. கற்புமுதலிய மானுட விதிகள் கடவுட்டன்மை யுள்ளனவென் றுரைப்பது உண்மையே. மாந்தரினத்தின் மேம்பாடுகருதிக் கடவுளே அக் கற்பனையநெறிகளை விதித்தனர் என்று கூறினுங் கூறலாம். ஆயினும், மனிதர்க்குள்ளேயே அவ்விதிகளின் ஆட்சி செல்லத்தக்கது. இவைகளை விதித்தது கடவுளானாலும், கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்கின்ற நிகழ்ச்சிகளில் இவைகளுக்குச்செல்வாக்கில்லை. தாயுமானவர் இயம்பியவண்ணம், பரம்பொருளோ, "சைவமுதலாம் அளவில் சமயங்களை வகுத்துப் பின் தேனே மேல்சமயங் கடந்து" நிற்றலேபோல், நெறிமுறை விதிகளை நம்மனோர்க்கு வகுத்திருப்பினும் தானே அவையனைத்தையுங் கடந்து நிற்கும் மாண்புடையது. "காரணங் கற்பனை கடந்ததும்" அது. ஆதலின்,

"நீதியு மநீதியு மாதியொ டனாதியும்
நிர்விஷய விஷயவடிவும் [யெனின்
அத்தனையும் நீஅலது எள்ளத்தனையும் இல்லை
யாங்கள் உனையன்றி உண்டோ"

என்று வினவுதற் குரியதாய் நிற்கின்ற பரம்பொருளோடு மாந்தர் தொடர்புடையராகின்ற செவ்வியில், மாநிடர்க்குள்ளேயே வழங்கிவருமாறு விதிக்கப்பெற்றுள நெறிமுறைகளுக்கு, அத்தொடர்பு இற்றகலும்படி இடையிற்கிடக்கும், ஆற்றல் இல்லை. ஜீவான்மாக்கள், தம்மை யீன்றவப் பரமான்மாவைக் காணுங்கால், ஆவைக்கண்ட கன்றெனத் துள்ளிக்குதித்து அதனோடு கலந்துகொள்ள விரைகின்றன. இது இயற்கை முறையின் இயக்கம். இதனெதிர், மானுடர்க்கென்றுசமைத்துள நாணம் நிறை கற்பு அனைய செயற்கை விதிகள் சிறிதளவும் நில்லா. எனின் மூவர்க்கும் முதலாயவத் தனிப்பரம் பொருளைத் தரிசித்தமாத்திரத்தில் அத்தெரிவையர், "தம்மை வலித்தவன்பால் செல்லும் உள்ளத்தைப் பிடித்தும் நாம்" என்று ஓடலாவது வியப்பாமோ! தம்மை அவன் வலித்ததால் தாம் ஓடினார்களே யன்றித் தம்முடைய இச்சையால் தொடர்ந்தா ரலர்.

கற்பென்பது ஓர்செயற்கைக்கற்பனை; கற்பின்இலக்கணம் காலத்தாலும் தேயத்தாலும் வேறுபடக் கருதலாவதே அதுசெயற்கை என்பதற்குச்சான்றாகும். பரமான்மாவைக் கண்டக்கால்அண்டிநிற்பதோ ஓர் இயற்கைத்தத்துவம். இராமன் இம்மாதர்களைத் தன்வயின் இழுத்துக் கொண்டது இவ்வியற்கையின் இயக்கமேயாகும். செயற்கைநெறியும் இயற்கை இயக்கமும் மாறுபட எதிரெதிர் நிற்குங்காலையில்,இயற்கை இயக்கமே வாகைகொள்ளும். எப்பொருளையுந் தன்பால் இழுத்துக்கொள்வது இப்பூமிக் கிருக்குமோர் இயற்கைச் சக்தி. காந்தங் கண்ட ஊசியென் ஆன்மாக்களைத் தன்பால் இழுத்துக்கொள்வதும் கடவுளிற்கு இயற்கையாய சக்தியே. இவ்வியற்கைச் சக்தியால் இயக்கப்பெற்றனர் மாதர் என்று காட்டுவதற்கே, பூமியின் சக்தியால் 'பள்ளத்துப் பாயும் நன்னீரனையவர்' ஆனார் அவர், என்று மெய்யுணர்வுடைய நம் புலவர்பெருமான் அரிதின் உவமை கூறுகின்றார்.இவ்வுவமையின் இயைபு கம்பர் மனத்தில் பெரிதும் பொருந்தியிருந்தது. அயோத்திமாநகர வீதியில் இவனைக் கண்ணுற்று நாணமும் பிரிந்தாராகி மையலால் நைந்த மாதரையும், 'பெரும்புன லனையார்' என்று மந்திரப்படலத்திலும் குறித்திருக்கக் காணலாம். அதுவுமன்றி, அங்குத் தெருவூடு சென்றவன், கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமையிழைப்பக்கானுங்கடலுங் கடக்கநின்ற தயரதன்மதலை என்பது மறந்துமறையும் வண்ணம், அவன் கடவுளென்பதை வற்புறுத்தினானாகிக் கம்பர்"அண்டர் நாயகன் வரைபுரை அகலத்துள்..........." என்று விளம்புவதும் அவ் வனிதையர்க் கொன்றும் வசை சேராமற் காக்கவே யாகும்.

அண்டரென்பவர் இடையருமாவர். கண்ணனென்றவதரித்துப் பின்னிவ் விராகவன் இடைமகளிற்கு நாயகனுயபோதும், அவர் செய்கை யாதும் விபரீதமாயதில்லை என்னுமவ் வாய்மையைப் பிள்ளைபெருமாள் ஐயங்கார், [தழுவி

மின்போ லிடையிடை மாதரெல் லாமுன்றன் மெய்
நன்போக சாகரத் துள்ளே முழுகவு நாண்மலராள்
தன்போக மேமகிழ் தாரரங் காவண்டர் தாமவரை
அன்போ டணைத்துத்துயின்றதெம் மாயமறிந்திலமே.

[அன்று மலர்ந்த தாமரையில் வைகும் திருமகளது இன்பத்தையே மகிழ்கின்ற, மாலையணிந்த திருவரங்கநாதனே, மின்னல்போன்ற இடுப்பினை உடைய இடைச்சிகள் யாவரும், உன்னுடைய திருமேனியைத் தழுவிச் சிறந்த இன்பக்கடலிலே அழுந்தினவர்களானபோதிலும், அவர்களது கணவன்மார், சிறிதும் வெறுப்புக்கொள்ளாமல் தாமும் அவர்களை அன்போடு அணைத்துத் தூங்கியது என்ன மாயமென்பது எங்களுக்குத் தெரியவில்லையே]

என்று திருவரங்கத்துமாலையில் நயமுறக் காட்டுகின்றார். மாயந்தான் யாதுமில்லை. அறிவினாற் பரமன் இவனென்று அவர் ஆய்ந்திலராயினும், "தீர்த்தனென்றுணர்ந்தது அவர்தம் சிந்தையே." மிதிலை மாதரும், அயோத்திமாதரும் ஆயர்மங்கையரும், அன்னார் கணவர்களும் யாவரும் பரம்பொருளோடு பயிலுஞ் செவ்வியில் மானுட உலகிற்குரிய விதிமுறைகளைவிட்டுக் கடந்தவராயினர்.

திருமா லிங்கு இராமனைப் பிறந்து மிதிலைக்கோர் மணாளனாகி மாதர்தம் நிறையைக் கவர்ந்தனன் என்றுரைப்பதற்கொத்த இந்நிகழ்ச்சியால் ஆன்மகோடிகளைத் தன்வய மாக்கிக்கொள்ளும் தனிப்பெருந் தன்மையை விளக்கினான். இது தான் செய்வதாக விளம்பினா னல்லன். இவ்வுலாவியற்படலம் உண்மை நிகழ்ச்சியை உரைப்பதைப்போல் தோன்றினும் அஃதோர் உருவகக் கதையே (Allegory) யாகும். அவனை நாயகன் என்பதற்கிணங்க ஆன்மாக்களைப் பெண்மையிற் பகருமாற்றால் மாதர்க ளவன்பால்மயங்கி வீழ்ந்தனர் என்றார் கம்பர். ஆண்மக்களி னுடலில் தங்கிய ஆன்மாக்கள் அப்பெற்றியன வல்லவோஎனில், பின்னுளிவ் விராமனைத் தண்டகாரணிய முனிவர்கள் தழுவுமாசையால் தளர்ந்தசெய்கையும் இவ்வுருவகக் கதையின் தொடர்ச்சியே யன்றி வேறன்று.

இவ்வகைகளில் மானுட உடலும் விதிமுறைகளும் மனிதசம்பந்தத்திற்கே அடங்கியவோர் எல்லைக்குட்பட்டனவென்பதையும், அலகிலாப் பரம்பொருளோடுள்ள இயற்கைஉறைவினி லின்னவைகள் பிணிப்பறப் போகுமென்பதையும் உரையாமல் காட்டிவைக்க இராமனை உலாக்கொண்டு செல்கின்றார் கம்பர். இக்கருத்தினையே திருவிளையாடற் புராணத்தில், சிவபெருமான் வளையல்விற்றபடலத்தில், பரஞ்சோதிமுனிவர் விளக்கியிருப்பது இங்குக் குறிகொள்ளதக்கது:—

இறைவன் குலபூ டணன்றிகிரி
யிவ்வா றுருட்டு நாண்முன்னாட்
சிறைவண் டறையுந் தாருவன
தெய்வ முனிவர் பன்னியர்தந்
நிறையன் றளந்து காட்டுகென
நெடியோன் மகனைப் பொடியாக்கு
மறவன் றானோர் காபாலி
யாகிப் பலிக்கு வருகின்றான்

[குலபூடண வேந்தன் தன்னுடைய சக்காத்தை நடத்திக்கொண்டுவரும் நாட்களில் முன்னொருநாள், இறகுகளையுடைய வண்டுகள் ஒலிக்கின்ற தாருவனத்தில் வசிக்குந் தெய்வத்தன்மையுடைய முனிவர்களது "மனைவியர்தம் நிறையை இன்றைக்கு அளந்து காட்டுவேன்" என்று,நெடுமால் மகனாகிய மன்மதனைச் சாம்பராக்கிய வீரனாகிய சிவபிரான், தான் ஓர் கபாலம் ஏந்திய கையனாகிப் பிச்சையெடுக்க அத்தாருவனத்திற்கு வந்தான்]

இங்குச் சிவபிரான், "முனிவர் பன்னியர்தம் நிறையை அளந்து காட்டுகென்'' என நேராகக் கூறிக்கொ

ண்டு வருகின்றான். இது இகலால் அறைகூவி வரும் மாற்றமன்று. எல்லையுடைய எதுவும் அளக்க வல்லதாம். நிறையை அளந்துகாட்டு மாற்றால் அதற்கு எல்லை உள்ளதென்பதைத் தெரிவித்து, ஆன்மதத்துவத்தை உலகறிய விளம்பவேண்டு மென்பதே எம்பெருமான் கயிலைமேவிய அண்ணல்தன் நோக்கமாகும். இராமன்தான் ஆன்றசெல்வ மத்தனையும் அருகுற ஆடையுங் கலன்களு மணிந்த திருப்பெருங்கோலமுடன் வோர் தோன்றலாய்ப் பொன்னெடுந்தேர்மிசை மறுகிற் சென்றனன். சிவபிரானோ,

வேத மசைக்குங் கோவணமும்
மெய்யி னீறு முள்ளாளக்
கீத மிசைக்குங் கனிவாயு
முள்ளே நகையுங் கிண்கிணிசூழ்
பாத மலரும் பாதுகையும்
பலிகொள் கலனுங் கொண்டிரதி
மாது கணவன் தவவேட
மெடுத்தா லொத்து வருமெல்லை

[வேதமாகிக் கட்டிய கோவணமும், திருமேனியில் விபூதியும், 'கனம்' என்று வழங்கும் உள்ளாளக் கீதத்தை இசைக்கும் கனிபோன்ற வாயும், அவ்வாயினுள்ளே அரும்பிய புன்னகையும், சதங்கையணிந்த தாமரைபோன்ற பாதங்களும், பாதரக்ஷையும், பிச்சைப்பாத்திரமும் கொண்டு, இரதியின் கணவனை மன்மதனே தவக்கோலங்கொண்டு வருவதுபோல், அவ்வனத்திடை வந்தபோது]

விள்ளுங் கமலச் சேவடிசூழ்
சிலம்பி னொலியு மிடறதிரத்
துள்ளுங் கீத வொலியுங்கைத்
துடியி னொலியுந் துளைச்செவிகீண்
டுள்ளம் பிளந்து நிறைகளைந்தீர்த்
தொல்லை வருமுன் வல்லியர்கள்
பள்ளங் கண்டு வருபுனல்போற்
பலிகொண் டில்லின் புறம்போந்தார்

[மலர்ந்த தாமரைபோன்ற சிவந்த பாதங்களில் அணிந்த சிலம்பினது ஒலியும், கண்டத்தில் அதிர்த்துத் துள்ளும் இசையின் ஒலியும், கையிலுள்ள உடுக்கையின் ஒலியும், செவித்துளையைத் தோண்டி மனதைப்பிளந்து கற்பினைப் பிரித்து இழுத்து விரைந்துவருவதற்குமுன், முனிவர் மனைவியர், பள்ளத்தைக்கண்டு பாயும் புனல்போல, பிக்ஷையை எடுத்துக்கொண்டு தம் மனைவாயிலில் சேர்ந்தார்]

வேறோர் உவமை தேடியமைக்க நேரமின்மையால் பரஞ்சோதிமுனிவர், கம்பரிடத்திருந்து, 'பள்ளத்துப்பாயும் நன்னீரனையவர்' என்பதைக் களவாடி இங்குப் 'பள்ளங்கண்டு வருபுனல்போல்'' என அமைத்துக்கொண்டனரென் றெண்ண லொண்ணாது. கற்றாரைக் கற்றாரே காமுறும் பெற்றியில், இயற்கைச்சக்தியால் இழுக்கப்படுவதற்கு வேறோர் உவமை இதனினுஞ் சிறந்தது இன்மைபற்றி அங்ஙனே வழங்கினர் என்னல் வேண்டும்.

முன்னர்க்காட்டிய உவமை ஒப்பநடத்தலால் மாத்திரமன்றிக் கம்பர்பெருமானுக்கும் பரஞ்சோதி முனிவருக்கும் கருத்து ஒன்றேயா யிருந்த தென்பதற்கு ஆதாரமாக இவ்விருநூல்களில் ஒவ்வோர் செய்யுள் அமைந்திருக்கக் காணலாம். அவை, கடவுள் திறத்தில் ஜீவான்மாக்கள் சேர்கின்ற தன்மையை விளக்குகின்றன.

வீதிவாய்ச் செல்கின் றான்போல்
விழித்திமை யாது நின்ற
மாதரார் கண்க ளூடே
வாவுமான் றேரிற் செல்வான்
யாதினு முயர்ந்தோர் தன்னை
யாவர்க்குங் கண்ண னென்றே
ஓதிய பெயர்க்குத் தானே
உறுபொரு ளுணர்த்தி விட்டான்.

[வீதியிலே செல்பவன்போல், கண்கொட்டாமல் விழித்து நின்ற மாதர்களுடைய கண்களுக்குள்ளே தாவுகின்ற குதிரைபூட்டிய தேரில் சென்றவனாகிய இராமன், எல்லாவற்றிலும் உயர்ந்தவர்களாகிய மேலோர், தன்னை யாவருக்கும் 'கண்ணன்' என்று சொல்கின்ற பெயருக்குத் தானே இன்று தகுதியான பொருளை உணர்த்திவிட்டான்]

என்பது கம்பர் கூற்று. உண்மையில் இங்கு உறுபொருள் குறிக்கப்பட்டதேயன்றி உணர்த்தப்பெறவில்லை. இக்குறிப்பை மேற்கொண்டு பொருளைஉணர்த்தியவர் சிவபிரானேயாகின்றார். தம்மை ஆட்கொள்ளுமாறு பற்பல விதங்களில் முனிவர்பன்னியர் வற்புறுத்துவதும் அதற்குச் சிவபிரான் தந்த மறுமொழியையும் உரைக்கலுற்ற பரஞ்சோதிமுனிவர்,

செக்கரஞ் சடையான் கண்ணில்
தம்முருத் தெரிய நோக்கி
இக்கொடி யார்போற் கண்ணு
ளெம்மையு மிருத்தி ரென்பார்
நக்கனுந் தனையன் னார்கண்
ணிடைக்கண்டு நகைத்து நம்மின்
மிக்கவர் நுங்க ணுள்ளார்
விழித்தவர்க் காண்மி னென்றான்.

[சிவந்த அழகிய சடையை உடைய சிவபெருமானது கண்களில் தமது உருவம் தோன்றுவதைப்பார்த்து, "இந்த மாதர்களை உமது கண்ணில் வைத்துக் கொண்டதுபோல் எம்மையும் வைத்துக்கொள்வீர்" என்று வேண்டிக்கொண்டனர் மாதர். சிவனும், தன்னுரு அப்பெண்களின் கண்களில் காணல்நோக்கி நகைத்து, "என்னிலும் சிறந்தவர் ஒருவர் உங்கள் கண்களில் இருக்கின்றார், நன்றாக விழித்து அவரைக் கண்டுகொள்ளுங்கள்" என்றார்]

என இனிதின் பாடுமாற்றால் இது விளங்கலாகும். "நம்மின் மிக்கவர்'' என்று இங்கு இருப்பதற்கேற்பக் கம்பர் செய்யுளிலும், "யாதினும் உயர்ந்தோன் தன்னை'' என்ற பாடமிருக்குமாயின் இவ்விரு செய்யுட்களுக்கும் உள்ள தொடர்பின் நயம் பின்னும் சிறக்கும்.

இராமன் குறித்தபொருளும் சிவன் உரைத்த பொருளும் இவைஇவை யாயின், 'கண்ணன்' என்பதற்குக் கம்பரே கண்டபொருளைப் பின் சூர்ப்பணகைப் படலத்தில்,

"எண்ணருளி யேழைமை துடைத்தெழு மெய்ஞ் [ஞானக்
கண்ணருள் செய்கண்ண னிருகண்ணி னெதிர் [கண்டான்''

[நற்புத்தியைக் கொடுத்து அதனால் அறியாமையை விலக்கி யாவற்றையுந் தன்னுருவாய்க் காண்கின்ற மெய்ஞ்ஞானக் கண்களைத் தருகின்ற 'கண்ணனை'ச் சூர்ப்பனகை தனதிரு கண்களால் கண்டாள்]

என்றுரைப்பதில் தெரிந்துகொள்ளலாம். கண்களுக்குக் காட்சிதான் ஆகின்றவன் என்று முன்னர்க்கூறிக் காண்பதற்குரிய கண்ணை அளிப்பவன் என்று இங்குக் காட்டுவதால், இவ்விரண்டையும் ஒன்று சேர்த்துக் காணக் கண் அருள்வதும் பரமன், அக்கண்களுக்குக் காட்சியாகின்றவனும் அப்பரமனே, என்னும் உண்மை ஓர்தற்பாலதாம்.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இனியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச் சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பால காண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3–0–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்
விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0–12–0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

„ சாதாரண கட்டடம் „ 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம் ...	... ரூ	5	0
அயோத்தியாகாண்டம்	...	5	0
ஆரணியகாண்டம் ...	...	4	0
கிட்கிந்தாகாண்டம்	...	4	8
சுந்தரகாண்டம் ...	...	5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனாக எழுத ரூ. 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஏழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ. 1. ஜாதகம் குறிக்க ரூ. 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதந் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ. 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ. 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

'அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது' என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

கௌசிக சிரோ கல்பம்

உங்கள் சிரேகத்திற்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரக்கூடிய தைலத்தை நீங்களே செய்து உபயோகியுங்கள்.

போலித்தைலங்களையும் குணமற்ற எண்ணெய்களையும் (Hair Oils) விலைகொடுத்து வாங்கி ஏமாராதீர்கள்.

கௌசிக சிரோகல்பத்தைப் பசும்பாலில் கரைத்துச் சரியளவு சுயமான நல்லெண்ணெய் சேர்த்து நெருப்பில் கொதிகவைக்க ஜலம் பூராவும் சுண்டிச் சுத்தமான தைலம்மட்டும் தனியாக நிற்கும். இத்தைலத்தை எடுத்து ஒருமண்டலம் உபயோகிக்க, மண்டையிடி ஒற்றைத்தலைவலி கண் எரிச்சல் மூளைக்கொதிப்பு இன்னும் சிரம் நேத்திரங்கள் சம்பந்தமான எல்லாவியாதிகளும் போய்விடும்.

பாக்கெட் ஒன்றிற்கு விலை அணா, 8, தபாற்கூலி வேறு. இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை,

மனேஜர்:—சேலம் ஸ்டோர்ஸ்,

சேலம்—SALEM.

வர்த்தமானம்

இந்தியாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற ஞாயிற்றுக் கிழமை கிராய்டன் போய்ச் சேரவேண்டிய ஆகாயத் தபால் விமானம், பெரும்புயலின் அகப்பட்டு நொருங்கி ஜினேவா விரிகுடாவில் விழுந்து விட்டது. அதிலிருந்த ஏழுபேரும் மூழ்கி மாண்டனர்.

***

ஆப்கானிஸ்தானத்துப் புதிய மன்னர் நாதர்கானுக்கும் ஹபிபுல்லாவுக்கும் சமாதானம் ஏற்படும் போல் தோன்றுகின்றது. பாச்சா சாக்கோ தமது சகோதரர் இருவரை நாதர்கானிடம் தூதராக அனுப்பியிருக்கின்றனர். இதற்கிடையில் பாச்சாசாகோ கைதியாய்விட்டதாக வதந்தி வருகின்றது.

***

இத்தாலியா இளவரசர், பிரின்ஸ் உம்பர்ட்டோ என்பவர் 24உ, யுத்தவீரர் கல்லறைக்கு மாலைபோடவிருந்த சமயத்தில், பர்னண்டோ டி ரோஸா என்ற 21 வயதுடைய இதாலியமாணவன் ஒருவன் சூழ்ந்திருந்த ஜனங்களிலிருந்து விலகி முன்வந்து இளவரசைச் சுட வாரம்பித்தான். தெய்வச்செயலாய் இளவரசர்மீது குண்டு படவில்லை.

***

24உ யன்று காலை கோரின் என்ற பெயருடைய ருஷியமாணவன் ஒருவன், லீஜ் சர்வகலாசாலை ஆசிரியர் பர்டிராண்ட் என்றவரைச் சுட்டுக்கொன்றுவிட்டார். ருஷிய மாணவர்களது கஷ்டநிவர்த்தியின் பொருட்டு ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருந்ததாகவும், அக்கமிட்டிக்குப் பிர்டிராண்ட் என்ற அவ்வாசிரியர் தலைவராக இருந்ததாகவும், அவர் அக்கமிட்டியிலிருந்து தனக்குப் பணம்ஒன்றும் கொடுத்து உதவாததால் சுட்டுவிட்டதாகவும் கோரின் சொல்கின்றான், எனத் தெரிகின்றது.

***

சென்னைக்குக் கவர்னராயமைந்துள்ளலெப்டினண்ட் கர்னல் ரைட் ஹானரபில் ஸர். ஜார்ஜ் பிரடரிக் ஸ்டான்லி, பி. ஸி, ஜி. ஸி. ஐ. இ., ஸி. ம். ஜி. முன் தெரிவித்தபடி சென்னையில் இம்மாதம் 28உ வந்து சேர்ந்திலர். அவர் வரும் நாள் சரியாகத் தெரிந்தபின் தெரிவிப்பதாக, 26உ கஜட்டில் கூறப்பட்டிருக்கின்றது.

***

லார்ட் இர்வின், சீமையிலிருந்து திரும்பிவந்து 25 உ தம் இராஜப்பிரதிநிதிப் பதவியை வகிக்கலாயினர். லார்ட் கோஷனும், லேடி கோஷனும் 26உ சீமைக்குப் புறப்பட்டுவிட்டனர். அவர்கள் புறப்படும்போது சென்னைக்கவர்னர், கவர்ன்மெண்டின் சார்பாகவும் இம்மாகாண வாசிகளின் சார்பாகவும் அவர்களுக்கு வழியனுப்பி உபசாரங்கூறுந் தந்தி யொன்று அனுப்பினர். அதற்குத் தக்கபடி எதிர்முகமன் கூறி லார்ட் கோஷனும் மறுதந்தி யனுப்பினர்.

***

சென்னைத் திருவல்லிக்கேணி ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாய புத்தகசாலையார், நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியை எல்லா வ்யாக்யாநங்களுடனும் பதிப்பித்திருப்பதாகத் தெரியவருகின்றது. ஒன்று முதல், ஒன்பதாம்பத்து வரையில் வெளிவந்துவிட்டன. அவைகளின் விலை, முறையே, ரூ. 7-8-0, 5-0-0, 5 8-0, 5-8-0, 6-0-0, 6-0-0, 5-8-0, 5-8-0 6-0-0. ஆகும். பத்தாம்பத்து அச்சிலிருக்கின்றதென்றும், இவ்வொன்பது பத்துக்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்க்கு, 10-ம் பத்து முடிந்தவுடன் அதைத் தனிவிலையின்றியும், தபாற்செலவு இன்றியும் அவர் அட்ரஸிற்கு அனுப்புவதாகவுந் தெரிவிக்கின்றனர்.

***

ஸர். ஸி. பி. இராமசுவாமி ஐயர், இந்தியாவிற்குப் புறப்படுமுன் லண்டனில் தன்னைப் பேட்டிகண்டு பேசிய ராய்டருக்குக் கூறியதாவது:—"இனி, சமநிலையில் கவுரமாக எல்லா இந்தியத் தலைவர்களின் ஒத்துழைப்பையும் பெறுவதற்குக் கவர்ன்மெண்டார் முயலவேண்டும். இதற்காகச் சர்வகக்ஷி மகாநாடு சேர்ந்து எல்லா விஷயங்களும் அதனில்ஆராயப் பெறவேண்டும். பிறகு குடியேற்றநாட்டு நிலைமையை இந்தியாவிற்களித்து மேல் அரசியல்முறைகளைத் திட்டம் செய்வதைப் பற்றிப் பேசுதல் வேண்டும். இப்படிச் செய்யின் இந்தியத் தலைவர்கள் அதனை அங்கீகரிப்பர் என்பதற் கையமில்லை."

***

19உ. லாகூரில் கூடிய மாணவர் மகாநாட்டை டாக்டர் கிச்லு அவர்கள் திறந்துவைப்பதென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இற்காக இவர் லாகூரிற்குப் புறப்படுந்தருணத்தில், "ஆக்ஷேபம் அதிகமாயிருப்பதால் நீங்கள் மகாநாட்டைத்திறந்துவைக்கவேண்டாமென்று தீர்மானித்து விட்டோம். தயைபுரிந்து மன்னிக்கவும்" என்றொரு தந்தி காரியதரிசியினிடமிருந்து அனுப்பப்பெற்றதாக அவர் கையில் கொடுக்கப்பட்டதால், மகாநாட்டிற்கு அவர் போகவில்லை. பிறகு விசாரணைசெய்ததில், காரியதரிசியாவது வேறு மகாநாட்டைச் சேர்ந்தவர்கள் யாராவது இந்தத்தந்தியை அனுப்பியதில்லை என்று தெரிகின்றது.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET,

Purasawalkam MADRAS.

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T, P. மீனாட்சிசுந்தரம் M. A ,B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நீட்ஷேன் எபிகுயூரன் ஜீனோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தரனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

நாலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—

பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ	8—0—0	வெளிநாடு ரூ	9—8—0
ஆப்லெதர் கில்டுபயிண்டு	உள்நாடு ரூ	10—0—0	வெளிநாடு ரூ	11—8—0
காலிகோ, பயிண்டு	உள்நாடு ரூ	9—8—0	வெளிநாடு ரூ	11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)